12-8-88 தேதிய ஐயாற்றுக் கயிலைக் காட்சி
நினைவு வெளியீடு—1

# திருநீற்றின் உண்மை


ஏ. ஆண்டாளம்மாள்
எனப் பெயரிய
மங்கையர்க்கரசியார்


பதிப்பாசிரியர் குழு :

டி. என். இராமச்சந்திரன்
பாரத் இரவீந்திரன்


போன் : 21131

பாரத் பதிப்பகம்,
தொப்புள் பிள்ளையார் கோயில் தெரு,
தஞ்சாவூர் - 613 001.

ரூ. 3/- 2/=

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# திருநீற்றினுண்மை

இஃது

மஹாவித்வான்-புரசை அஷ்டாவதானம் சபாபதி
முதலியாரவர்கள் மாணுக்கரும் தமிழ்ப்பண்டிதருமாகிய
புரசை-சுந்தர முதலியாரவர்கள் குமாரர்

**C. S. ஏகாம்பர முதலியாருடைய மனைவியாரும்,**
**(Agent S & T Crops 9th (Sec' bad) Dn.)**

சைவ சித்தாந்த சமாஜத்தின்
வனிதை வகுப்புக் காரியதரிசியும்
ஸ்ரீகாசிவாசி

**சாம்பவஸ்ரீ-செந்திநாதையரவர்களிடத்து**
அநுக்கிரகம் பெற்றவருமாகிய
ஆண்டாளம்மை எனப் பெயரிய

**மங்கையர்க்கரசியாரால்**
திருசிரபுரத்தில் 1909-ம் வருஷத்தில்
உபந்நியாசஞ் செய்யப்பட்டது.

---

## Saiva Siddhanta Upanyasa Series No. I.

---

மதுரைத்
தமிழ்ச்சங்க முத்திராசாலையில்
அச்சிடப்பட்டது.

பிரமாதீச ஹூ கார்த்திகை மீ
1913

(Copy right Reserved)

சிவமயம்

## பாயிரம்

ஸ்ரீமான் ஏகாம்பர முதலியாரவர்களையும் அவரது அன்புடைய மனைவியாராகிய ஸ்ரீமதி ஆண்டாளம்மாள் எனப் பெயரிய மங்கையர்க்கரசியாரையும் திருசிரபுரத்திலே நடேந்தேறிய சைவசித்தாந்த சமாஜத்தின் நான்காவது கூட்டத்திலே நான் முதன்முதற் சந்தித்தேன். அன்று அம்மையாருடைய திருநீற்றினுண்மை என்னும் விஷயம் பற்றிய பிரசங்கத்தைக் கேட்டு மிகுந்த வியப்பும் ஆர்வமும் கொள்ளாதவர் இல்லை. சொல்லினிமையாலும் பொருட்டிறத்தாலும் எவருடைய மனசும் உருகுமாறும், அறிவு விளங்குமாறும் ஒன்றரை மணிப்போது அமிர்தவாரியெனப் பொழிந்தார். அன்று தொட்டு இன்றுவரை அவ்விருவர்க்கும் எனக்கும் நிகழும் பழக்கம் இனிதோங்கிப் பெருங்களிப்பை விளைக்கா நின்றது. நான்கு வருடகாலமாக அவர்களை நான் நெருங்கிப் பழகியவிடத்து, அவர்களுடைய வைதிகசைவசித்தாந்தப் பயிற்சியிலுள்ள உழைப்பும், ஊக்கமும், ஆற்றலும், ஆர்வமும், அந்தச் சித்தாந்த சமயத்தை யாண்டும் உபந்நியாச முதலியவற்றாற் பிரகடனஞ்செய்யவேண்டுமென்று அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியும், மெய்வருத்தமும், பொருட்செலவும் எவ்வளவென்று நான் நன்கு அறிந்துள்ளேன். இவையெல்லாம் சைவசித்தாந்தத்தின் மீது முதிர்ந்த அன்பில்லா வழி அமையாவாதலின், முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் மீதும், சிவனடியார்மீதும் அவர்கொண்ட பேரன்பு எத்துணைத் தாகும் என்று நன்கு அநுமானிக்கப்படும். தமிழிலேயுள்ள சித்தாந்த சாஸ்திரங்களையும், திருமுறைகளையும், ஏனைய ஆன்றோர் செய்த நூல்களையும் கற்று, அவற்றின் பயன் இன்னதென்றோர்ந்து, அப்பயனை உலகிலுள்ளார்க்கும் அறிவுறுத்த வேண்டுமென்று முயல்வது எவர்களாலும் பாராட்டப் படத் தக்கதன்றோ? அம்மையார் உபந்நியாசத்தில் வடமொழி வாக்கியங்களை எடுத்து உதகரித்தலிற்போதரும் இனிமையை யும் வன்மையையும் யாவரும் அறிவாரன்றே. இதனால் வட மொழிப் பயிற்சியும் நம்மவர்க்கு இன்றியமையாதென ஓர்ந்து, வடமொழியிலும் பயின்று, ஸ்ரீநீலகண்ட சிவாசாரிய சுவாமிகளருளிய சைவபாஷ்ய முதலிய பெருநூல்களையும் தக்கவர்பாற் கற்று வருகின்றார்.

பெங்களூரிலே ஸ்ரீமான் ராய்பகதூர் தர்மரத்நாகரம் ஆர்க்காட்டு நாராயணசாமி முதலியாரவர்களையும், ஸ்ரீமான்

[library stamp]

ராய்பகதூர் கங்காதரச் செட்டியார் முதலிய கனவான்களையும் சார்ந்த மாது சிரோமணிகளாற் கூடி நடத்தப்பட்ட ஆரிய சகோதரிகள் சங்கம் என்னும் சபையிலே முதன்முதல் அம்மையார் பிரசங்கித்தார். அம்மையாரது கல்வித் திறத்தையும், நல்லறிவையும் உணர்ந்து, அவரை அச்சபைக்கு வருமாறு அடிக்கடி வேண்ட, அதற்கிசைந்து பெரிய புராணத்துள்ள அத்தியற்புத மாதுர்யமாகிய நாயன்மார் சரித்திரங்களை அம்மையார் கேட்போர் மனமுருகிப் பரவசப்படுமாறு பிரசங்கித்து வந்தார். பெங்களூர்ப்பேட்டை ஸ்ரீநிவாசமந்திரக்திற் கூடிய சபையினும் அம்மையாரால் உபந்நியாசஞ் செய்யப்பட்டது.

அக்காலத்திலே சைவசித்தாந்த மஹாசமாஜத்துக்குக் காரியதரிசியாயிருந்த ஸ்ரீமான் தமிழ்ப்பண்டிதர் நாகை வேதாசலம்பிள்ளையவர்கள் அவ்விஷயங்களைக் கேள்வியுற் றறிந்து, மேலே குறித்த திரிசிரபுரத்திற் கூடிய நான்காவது சைவசித்தாந்த சமாஜத்துக்கு அவ்விருவரையும், அழைக்க, "திருநீற்றினுண்மை" என்னும் விஷயம் அவ்வம்மையாரால் பிரசங்கிக்கப்பட்டது.

அச்சமயத்திலே முதலியாரவர்கள் சிகந்திராபாத்துக்கு உத்தியோக விஷயமாக மாற்றப்பட்டார்கள். அது முதல் அந் நகரத்திலே அம்மையாரும் வசித்து, அங்கே நேர்ந்த வார்ஷிகக் கூட்டங்களில் இருமுறை பிரசங்கஞ் செய்தார். அங்கே இராணுவ சம்பந்தமான கம்மிசேரியட் உத்தியோகத்தில் முதலியார் இருந்தமையால், அங்கங்கே நடந்த ஒவ்வோர் சைவசித்தாந்த சமாஜத்துக்கும் என் சொல்லுக்கியைந்து தமது மேலதிகாரி களிடத்தில் அனுமதி பெற்றுக் கொண்டு செல்லுதற்கு அவர்கள் பட்ட கஷ்டங்கள் எனக்கே தெரியுமன்றி, மற்றெவர்தாமறிவார்!

1910 ஆம் வருஷம் டிசம்பர் மீ 26 ஆம் தேதி முதலாக இராமநாதபுரத்திலேஸ்ரீசேதுபதிமஹாராஜா அவர்கள் ஆதரவுபற்றி ஸ்ரீஇராமலிங்கவிலாசத்தில் நடந்த சைவசித்தாந்த சமாஜத்தில், நம்மைஆளுடைய பிள்ளையார் அருளிய வாழ்கவந்தணர் என்னும் பாசுரத்தைப் பீடிகையாகக் கொண்டு அம்மையாரால் 27-ஆம் தேதி மாலையில் திருப்பாசுரதீபிகை என்னும் மெய்ம்மொழிப்பயன் விளக்கம் பற்றிய உபந்நியாசஞ் செய்யப்பட்டது. அப்போது அக்கிராசனாதிபதியாயிருந்தவர் மைசூர் மஹாராஜா அவர்கள் சமஸ்தானத்திலே ஆலோசனைத் தலைவராயிருந்த திவான் பஹதூர் சபாபூஷணம் கே. பி. புட்டண்ணச் செட்டியாரவர்களே,

அம்மையாரின் சொல்நயப்பும், பொருட் பிரிப்பும், பேசும் திறமும் எவர்கள் மனத்தையும் கொள்ளை கொண்டன. அப்பிரசங்கம் ஒரு மணிப்போதுக்கு மேற்படவே உபந்நியசிக்கப்பட்டது. இது அம்மையாரின் ஆழ்ந்த கல்வியையும் உறுதியாகிய அன்பையும் விளக்கியது. ''அம்மையார் ஸ்ரீமான் ராய்பகதூர் தர்மரத்நாகரம் ஆர்க்காட்டு நாராயணசாமி முதலியாரவர்களைச் சேர்ந்த தகுந்த மரியாதையுள்ள குடும்ப குலத்தினரென்றும், ஆண்பாலார் நிறைந்த பெருஞ் சபையிலே முன் வந்து பிரசிங்கிக்க உடன் பட்டது வீரத்தோடியன்ற தன்னிழப்பைக் காட்டியதென்றும், அவர் தமது குலத்துக்கோர் அணியாய் உள்ளார் என்றும், தம்முடைய சகோதரிகளுக்குக் குன்றிலிட்ட தீபமாயிருக்கின்றார்'' என்றும் புகழ்ந்து அக்கிராசனாதிபதியவர்கள் பிரிய உபசார வார்த்தைகள் கூறினார்கள். அவர்கள் கூறிய வாக்கியங்கள் ''சித்தாந்ததீபிகை'' 11 ஆம் புஸ்தகத்து 365 ஆம் பக்கத்திலே காணப்படுகின்றன.

மேலும், இந்த அம்மையாரின் மாமனார் சிறந்த தமிழ் வித்வானாயிருந்தவர். இவரது புதல்வராகிய ஸ்ரீமான் ஏகாம்பர முதலியாரவர்களும் அம்மையாரும் சைவசித்தாந்த சாத்திரங் களை ஒருங்கு கற்றுப் பயின்று கொண்டதின் விளைவே அப்பிரசங்கமுமாம் எனக்கொள்க. அம்மையாரின் இயல்பைச் சகோதரிகள் யாவரும் முன் மாதிரியாகப் பற்றவேண்டுமென்பதும்' ஆண்பாலார்களும், தத்தம் மனைவியரையும் அங்ஙனம் வித்தியாப்பியாசம் செய்வித்து வருதல் முக்கிய கடமையா மென்பதும் கவனிக்கற்பாலனவாம்.

இராமநாதபுரத்திலே ஸ்ரீமான் பாண்டித்துரைச்சாமித்தேவர் வித்தியாசாலையில் ஓர் பெரியபுராணப்பிரசங்கம் அம்மையாரால் செய்யப்பட்டது.

இராமநாதபுரத்துப் பிரசங்கம் முடிந்தவுடன் இராமேச்சுர முதலிய சிவத்தலங்களைத் தரிசித்துக் கொண்டு, தோன்றாத் துணைவராகிய எம்பெருமானார் எழுந்தருளியிருக்கும் திருப்பாதிரிப்புலியூரை அடைந்து, அங்கே வீரசைவ குருபீடமா யிருக்கும் ஸ்ரீமத் சிவசண்முக தேசிகசுவாமிகளின் ஆஞ்ஞாப் பிரகாரம் இரு உபந்நியாசங்கள் புரிந்தார்.

நான் 1911 ஆவது வருஷம் ஏப்பிரல் மாதம் சிகந்தராபாத்துக்குப் போய்ச் சில பிரசங்கங்கள் நிகழ்த்தியகாலையில் அங்குள்ள, சித்தாந்த சமாஜத்தில் அம்மையாரும் பெரியபுராணப் பிரசங்க

மொன்றுமிகவும் அருமையாய்ச் செய்தார். ஐதிராபாத்தின் கண்ணதாய சதர்க்காட்டிலுள்ள "மாதர்சபை" யினும் ஓர் உபந்நியாசம் செய்தார்.

அடுத்த ஜூன் மாதம் திருநெல்வேலியைச் சேர்ந்த பாளையங்கோட்டையிலே "சைவசமயாபிவிருத்தி" சபையின் அப்தபூர்த்தியில் விபூதிப்பிரசங்கமொன்று அம்மையார் அற்புதமாய்ப் பிரசங்கித்தார். பின்னர் ஸ்ரீசாலிவாடீசுவரப்பெருமான் ஆலயத்திலே சைவாகம புஸ்தகசாலை அமைத்த போதும், அம்மையார் அதனையுற்று வியந்து பேசினார். அங்கிருந்து திரும்பும்போது சிதம்பரத்துச் செந்தமிழ்ச் சங்கத்திலே ஓர் உபந்நியாசம் செய்தார்.

அடுத்த டிசம்பர் மாதம் சென்னை விக்டோரியா பப்ளிக் ஹாலிற்கூடிய சைவசித்தாந்த மஹா சமாஜத்தில் நான் அக்கிராசனாதிபதியாயிருந்தபோது சிவலிங்க மகத்துவத்தைப் பற்றி ஓர் உபந்நியாசஞ் செய்தார்கள். அப்போது கூடிய ஆடவர்கள் பெண்களின் தொகையைக் கணக்கிடமுடியாது.

1912ஆவது வருஷம் காஞ்சி மாநகரத்திலே கூடிய சைவ சித்தாந்த மஹாசமாஜத்தில் ஸ்ரீமான் டி. பொன்னம்பலம் பிள்ளையவர்கள் M.R.A.S அக்கிராசனாதிபதியாயிருந்தபோது, அம்மையார் அத்துவிதமுத்திலக்ஷணம் என்னும் ஓர் விஷயத்தை அற்புதமாய் உபந்நியாசித்தார்.

இப்பிரசங்கங்களில் இப்போது அச்சிடப்பட்டது. 'திருநீற்றிணுண்மை" என்பதேயாம். திருநீறு சைவசமயிகளுக்கு மிகவும் இன்றியமையாததால், அதன் மகிமையை அறிந்து கைக்கொள்வது எத்துணை முக்கியமாம் என்று நான் எடுத்துக் கூறுதல் மிகையாம்.

ஆயினும், இக்காலத்து ஆங்கிலேய கல்வி முதிர்ச்சியினாற் சைவசமய நூல்கள் படிக்கப்படாவாய்ப் போக, அதனால் உண்மையெடுத்துரைப்பார் அரியராயிருத்தலினாலும் புறச்சமயத்தவர் போதனைகளார் நம்மவர் அறிவு நிலைகுலைதலானும் நம்மவர்களுடைய மனசெல்லாம் தத்தமிலே மறிந்து அவர்கள் உண்மை வரமாட்டாது விபூதி முதலிய சாதனங்களாற் பயனில்லை என்று கூறுதலாலும், (சிவாத்துவித) வேதாந்த சித்தாந்தங்களை நன்றென்று கூறுகின்றவர்களும் அவற்றைப்

பொருட்படுத்தாது விடுநலானும். அவற்றின் திட்ப நுட்பங்களைப் பற்றிப் பிரசங்கஞ் செய்தல் பெரும் புண்ணியமேயாம். இப் பெரும் புண்ணியத்தை யுத்தேசித்து முன் வந்திருக்கும் அம்மையார்க்கும் அவர் காதலர்க்கும் சைவவுலகம் மிகுதியும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டதேயாம்.

நீறணிவது மிகவும் பழைமை பற்றிய வைதிகாசாரமென்பதிற் சந்தேகமில்லை. இந்த ஆசாரம் பண்டுதொட்டு இந்தியர் அனைவராலும் அநுஷ்டிக்கப்பட்டு வந்த தொன்றாமாயினும், சில நூற்றாண்டுகளாக வைஷ்ணவர் இதனை ஆதரிக்காது தவிர்த்தோராயினர். வைதிகசைவசித்தாந்தத்திலே ஒழுகாது வேதாந்திகள் என்னும் பெயரோடு சஞ்சரிப்பவரும் விபூதியை ஓர்காலும் கைவிட்டாரில்லை. வேறு சிலர் "ராம" "ராம" "கோவிந்த" "கோவிந்த" என்று அலப்புவோரும் விபூதி உருத்திராக்ஷங்களைத் தங்கள் சரீரத்தில் அணியாது விட்டாரல்லர். மேலும், உத்திரதேசவாசிகளாகிய சந்நியாசிகள் அக்கினியை வளர்த்து, ஆகுதி செய்து, வழிபட்டு மறுதினத்தில் அதில் விளைந்த விபூதியைத் தஞ்சரீரமெங்கும் தரித்துக் கொள்ளுகின்றார்கள்.

"திருநீற்றினுண்மை" என்னும் வியாசத்தில் பின்வரும் விஷயங்கள் கூறப்படுகின்றன :-

1. விபூதி உத்திராக்ஷம் சிவபூஷணமெனல்.
2. அவைகள் சிவசின்னம் அல்லது வேடம் எனல்.
3. அவையே சிவமெனல்.
4. அவை தரிக்கப்படும் விதம்
5. சிவத்தின் இலக்கணம்.
6. அவைகளுக்குச் சுருதிப்பிரமாணம்.
7. விபூதியின் மகிமை இன்னதெனல்.
8. அதன் பயன் இன்னதெனல்.
9. விபூதியின் வரலாறு இன்னதெனல்.
10. அதன் காரணமும் பெயரும் இன்னதெனல்.
11. அதனைப் பசுவின் சாணத்தைக் கொண்டு அமைத்தல்.
12. விபூதியின் அற்புதச்செய்கை இத்தன்மைத்தெனல்
13. விபூதியே பஞ்சாக்ஷரமெனல்

ஜே. எம் நல்லசாமிப்பிள்ளை

# APPRECITIONS

## Extract from The Siddhanta Dipika

Volume X January 1910, No. 7 Page 257.

The most noteworthy feature of the conference during its past session was the pillar of intellectual strength it had found in the pious young lady, Mrs. Andalammal, who treated it to a most solemn and thrilling discourse on the "Significance of the Sacred Ashes" on the morning of the 30th. Her delivery was impeccable, and the calm poise of her thinking, and the rippling flow of her pure eloquence terminating with beautiful effect in a sonorous climax, whenever the dignity of the topics demanded it, was a matter for extreme praise. As a fluent and cultured speaker of Tamil, she could hold her own, by the side of the best of the sterner sex known to fame. The lecture assumed a much wider scope in her hands than the title seemed to require, and she gave an elaborate and telling resume of the subtler spiritual aspects of the Saiva-Siddhanta, staggering the audience by the wealth of her resources, culture, Sanskrit and Tamil authorities and quotations. The president complimented the lady-lecturer in suitably greaceful terms for her accomplishments and piety, and presented her with two lots of books as souvenirs of esteem and admiration, after announcing the names of the gentlemen whose presents they were. The following encomium in Tamil verse was compilied in her honour by A. Shanmuga Pillai of Solavandan, one of the greatest Tamil pandits of the present day :-

சொல்லாயுமௌவையுருத்தோன்றாதேயிந்நாளிற்
செல்லாயுங்கூநீதறீசிறுமருங்குலாண்டாளாய்ப்
பல்லார்முனிற்றுப்பயன்விரிப்பக்கேட்டதற்பிற்
கல்லாருங்கற்றார்போற்காட்சியினராயினரே.

## Extract from the Siddhanta DiPika.

Volume XI July 1910, No.1. Page 28.

The first address on the next day was given by a lady from Bangalore, which will probably astonish the readers. In his

speech expressing thanks, the Secretary told us on the following day, that the lady speaker had first hesitated, when he asked her. But her husband had encouraged her, saying; "For the Saiva Siddhanta, we must even be prepared to give up our lives." As we were somewhat late, we heard, only the last part of the address. The lady spoke with exceeding fluency and rapidity, loud and distinctly. Her theme was "The Holy Ashes". To judge from the little we heard, she endeavoured to explain symbolically the custom of besmearing the forehead and other parts of the body with ashes. After the address, the president admonished the hearers not to abandon this custom. as, by the holy abhes, sin was removed.

*(Rev. H. W Schomerus.)*

## Extract from the Siddhanta Dipika

Volume 12 January & February 1912, No. 7 & 8 Page 245

The case of our lady lecturers should be specially mentioned. The first is Mrs. Ekambaram Andal, ammaa Tamil lady hailing from Secunderabad and belonging to a most respectable family of Mudaliars. There was a great rush before her address commenced and yet the atmost silence was preserved during the one hour her learned discourse lasted and the audience was spell-bound. Her subject 'Siva Linga Mahatvam' and her exposition of the subject was most learned and luminous; and she quoted texts from Rig Veda downwards. If she knew English and had appeared in the lecture-halls of Europe her name and fame would have reached the ends of the earth in no time.

## Extract from the Siddhanta Dipika.

Volume XIII January 1913, No 7. Page 328.

After lunch interval, came the learned discourse of Srimati Andalammal of Secunderabad, and the interest with which it was awaited would be evident from the hall becoming crammed about this hour. She spoke with much grace on the subject of

Advaita Mukti Lakshana and she marshalled the various views regarding advaita and passed her pungent criticism thereon and upheld the sudda-advaita siddhanta view supported by various authorities from Sanskrit and Tamil. If in fact, we are to find fault with it at all, it was much too learned for an audience like that before her. We are glad to know that in addition to her mastery of the Tamil Siddhanta Sastras, she is studying the great Bashya of Srikanta Sivacharya in the original itself

சிவமயம்

## அணிந்துரை

"மூன்று கண்ணுடையராயும், மூன்று சிரசுடையராயும், உருத்திரசம்பந்தமுடையராயும், மூன்று கையுடையராயும், முக்குண முகத்தினராயும், மூன்று கால்களையுடையராயும், அக்கினிக்கண்ணுடையராயும், விபூதி பூசிய திருமேனியுடையராயும், செவ்வரத்தமலர் போன்ற நிறத்தினராயும், பீமராயும், இரட்சாமந்திரேசுவரநாயகராயும், தாண்டவாடம்பரராயுமுள்ள பஸ்மேதவரை யாவரும் தியானித்துச் சாந்தி அடைவர்ராக" என்று மகுடாகமம் கூறுகின்றது.

பஸ்மஜாபாலம், பிருகஜ்ஜாபால முதலிய உபநிடதங்களின் மாத்திரமின்றி, உத்தரமீமாஞ்சை எனப்படும் வேதாந்த சூத்திரத்துக்கு முக்கிய ஆதாரமாயுள்ள உபநிடதங்களுள்ளே ஈசாவாசியோபநிடதத்திலும் பிருகதாரணியோபநிடதத்திலும் பஸ்மம் என்றும், தைத்திரீயோபநிடதத்திற் பூதி என்றும், முண்டகோபநிடதத்திற் சிரோ விரதம் என்றும், சுவேதாசுவதரோபநிடதத்தில் அத்தியாசிரமம் என்றும் விபூதிக்குப் பெயராம். விபூதியைப்பற்றி உரைக்காத உபநிடதங்கள் இல்லை. விபூதியையுற்றுப் புகழாத புராணங்கள் இல்லை. விபூதியையுற்று இசைக்காத இதிகாசங்களில்லை. விபூதியை யுற்று மீக்கூறாத ஸ்மிருதிகள் இல்லை. விபூதியை யுற்று முழங்காத ஆகமங்கள் இல்லை. வைஷ்ணவர்க்குச் சித்திரோர்த்துவ புண்டரத்தை எடுத்துரைக்காது விஷ்ணுபுராணமானது விபூதியையுற்றுப் பேசுங்கால், "நந்தகோபர் வந்து கிருஷ்ணருடைய சிரசிலே கோமயசூரணமாகிய விபூதி காக்கும் என்று கூறி இட்டார்" என்றும், நாலாயிரப் பிரபந்தம் "கரியமேனிமிசை வெளியநீறு சிறிதேயிடும்" என்றும் "நீறு செவ்வேயிடக் காணினெடுமாலடியாரென்றோரும்" என்றும் கூறுமாயின், விபூதியின், மகிமையை யாரே புகழவல்லார் !!

பஸ்மஸ்நானம் தூய்தும் அது எக்காலமும் நோய்களை நாசஞ் செய்வதும் நல்ல முத்தியைக் கொடுப்பதும் கங்கையை நிகர்ப்பதும், சமஸ்த விஷத்தையும் ஓட்டுவதும், கோபத்தைப் போக்குவதும், சாந்தத்தை வருவிப்பதும், இராசட்ச பைசாச யட்சகணங்களைத் துரப்பதும், சந்தோஷத்தையும் புஷ்டியையும் தருவதும், அனைத்தையும் வசிகரிப்பதும், உலகத்தில் சமஸ்த சுகத்தையும் தருவதும் சிவபிராசத்தை அருளுவதும். சமஸ்த சாஸ்திரங்களினும் கூறப்பட்ட கருத்தையெல்லாம் அடக்கிப் பரமாச்சாரிய சுவாமிகளாகிய திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் விபூதியை வியந்து கூறுமிடத்து, இது வேதசிரசுகளிலுள்ள தென்றும், ஞானத்தைக் கொடுப்பதென்றும், இருஷிகள் அணிவதென்றும், அன்பைக் கொடுப்பதென்றும், சித்திகளை ஈவதென்றும், மகத்துவத்தையும் மதியையும் கொடுப்பதென்றும் அழகினாற் பொலிந்ததென்றும், எவர்களாலும் புகழப்படுவ தென்றும், பார்க்குந்தோறும் இன்பத்தைப் பயப்பதென்றும், வருத்தமெல்லாம் ஒழிப்பதென்றும் துன்பங்களையெல்லாம் ஒழித்து, இன்பத்தைக் கொடுத்துச் சிவலோகத்தில் வாழ்விப்பது என்றும் பலவாறாகத் துதித்திருக்கின்றார்.

''ஈசானத்துள்ள ஐவகைப் பிரகாரமாயுள்ள பஸமத்தைச் சிரசினும், தற்புருஷத்துள்ள நால்வகைப் பிரகாரமாகிய பஸ்மத்தை நெற்றியினும், அகோரத்துள்ள எண்வகைப் பிரகார மாகிய பஸ்மத்தை இதயத்தினும், வர்மத்துள்ள பதின்மூவகைப் பிரகாரமாகிய பஸ்மத்தைக் குறுகியப் பிரதேசத்திலும், சத்தியோ சாதத்துள்ள எண்வகைப்பிரகாரமாகிய பஸ்மத்தைப்பாதத்திலும் பூசுக'' என்று உபநிடதம் கூறுமாற்றால் சிவாகமத்திலே பிரதிபாரிக்கப்பட்ட அஷ்டத்திரிம்சத்கலாசக்திகளும் முப்பத் தெண்வகைப்பட்ட பஸ்மம் எனப்படுகின்றன என்பது பெற்றாம். இவ்வுண்மை நோக்கியே பரமாசாரியரருளிய திருநீற்றுப் பதிகத்தை அகஸ்தியமகாமுனிவர் ''பரையின் வரலாறு'' என்று அருளிச்செய்தார்.

''விபூதியில்லாத நெற்றி பாழ்: சிவாலயமில்லாத கிராமம் பாழ்: சிவபெருமானைப் பூசியாத பிறவி பாழ்: சிவத்தையுற்றுக் கூறாத சாஸ்திரம் பாழ்'' என்று வேதம் கூறிய கருத்தையுட் கொண்டன்றோ, திருநாவுக்கரசுநாயனார்.

திருக்கோயிலில்லாத திருவிலூருந்
திருவெண்ணிறணியாத திருவிலூரும்
பருக்கோடிப்பத்திமையாற்பாடாவூரும்
பாங்கினொடு பலதளிகளில்லாவூரும்

வீருப்போடு வெண்சங் கமூதாவூரும்
விதானமும் வெண்கொடியுமில்லாவூரும்
அருப்போடு மலர்பறித்திட்டுண்ணாவூரும்
அவையெல்லாமூரல்ல அடவிகாடே

என்று அருளிச்செய்தார். பிறவிநோய் தீர்ப்பதற்குள்ள மணி மந்திர ஔஷதங்களுள்ளே விபூதியாவது ஔஷதம் எனப்படும் என்று சங்கரசங்கிதை கூறுகின்றது.

பிராமணனேனும், ஷத்திரியனேனும், வைசியனேனும், சூத்திரனேனும் தன் சரீரமெங்கும் விபூதி தரிப்பானாயின், அவன் சரீரத்து எவ்வளவு ரோமங்களுண்டோ அவ்வளவும் லிங்கங்களாம் என்று ஜாபாலம் கூறுகின்றது.

பிரகாசஞ் செய்வதாற் பசிதம் எனவும், பாவத்தை உண்டு விடலாற் பஸ்மம் எனவும் சுத்தியைச் செய்வதால் விபூதி எனவும், பூதப் பிசாசாதிகளினின்று காத்தலால் ரட்சை எனவும் பெயர் பெறும் என்று ஸ்மிருதி கூறுகின்றது.

காசி வாசி செந்தி நாதையர்

## விபூதி

சித்தாந்த மெய்ச்சமயச் சிவநெறிக்கு வித்தாகித்
திருமா லாதி
பெத்தாந்தக் கணத்தவர்க்கு மெவ்வெவர்க்கும் பெருவாழ்வு
பெருக்கி மும்மைக்
கொத்தாந்த மலமுருக்குங் குறிகாட்டி நித்தியமாய்க்
கொண்டார்க் குற்ற
பித்தாந்த மதப்பிணியைத் தபுமருந்தாந் திருநீற்றைப்
பேணி யுய்வாம்.

## சிவகாமியம்மையார்.

பூரணியைத் தனுகரண புவனபோ கங்கடமைப் புரக்குமாயா
காரணியைப் பசுபாச மலமகல மெஞ்ஞானக் கண்ணிற்
றோன்று
மாரணியைப் பரமசிவ னானந்த நடத்தின்வைத்த
வருட்கண் ணாளைச்
சீரணிகொள் பொழிற்றில்லை; சிவகாம சுந்தரியைச்
சிந்தை செய்வாம்.

திருச்சிற்றம்பலம்

## திருநீற்றினுண்மை

மகாகனம் பொருந்திய அக்கிராசனாதிபதியவர்களுக்கும், அன்பிற் சிறந்த சகோதரிகள், சகோதரர்களுக்கும் பிரிய விஞ்ஞாபனம்.

அறிவிற் சிறந்த பெரியோர்காள் !

புழுவினுங் கடைப்பட்ட சிறியேன் இன்று இம்மகா சபையின் கண்ணே உபந்நியசிக்கப் புகுந்த "திருநீறறின் உண்மை" என்னும் விஷயத்தின் பெருமையும், அதனை எடுத்துப் பேசுவான் துணிந்த என் சிறுமையும் நோக்குங்கால், அவை இரண்டிற்கும் உள்ள வேற்றுமை விண்ணுயர்ந்த மலைக்கும் மண்ணிழிந்த தினைக்கும் உள்ள வித்தியாசத்தினும் மிகப் பெரியதாகக் காணப்படுகின்றன. அதுவேயுமன்றி எழுத்துச் சொற் பொருள் யாப்பு அணி என்னும் செந்தமிழ் ஐந்திலக்கணங்களும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை பதினெண் கீழ்க்கணக்கு என்னுஞ் சங்க இலக்கியங்களும், தொல்காப்பியம் முதலிய பல்காப்பியங்களும், பூவார்க்கொன்றைப் புண்ணியற்கினிய தேவார முதற் பன்னிரண்டு திருமுறைகளும், முத்தாந்த நிலைமுழுதும் உணர்த்துஞ் சித்தாந்த சாத்திரம் பதினான்கும், நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், நூற்றெட்டு பநிடதம், பதிணென் புராணம், இருபத்தெட்டாகமம் என்னுஞ் சமஸ்கிருதப் பெருநூல்களும் முற்றவுணர்ந்து தெற்றெனத் தெளிந்து அறிவின் எல்லைக்கோர் இடமாகிய ஆன்றோரான் மாத்திரம் எடுத்து விரித்து உபந்நியசிக்கற்பாலதாம் இவ்விழுமிய பொருளை ஒன்றுக்கும் பற்றாத எளியேன் சொல்லுங்கால் எழுத்துக் குற்றங்களும், சொற் குற்றங்களும், சொற்றொடர்க் குற்றங்களும், பொருட் குற்றங்களும் மிக மலிந்து கிடக்குமாயினும், சந்திரனை நோக்கி அதின் சங்கத்தை உலகத்தார் பாராட்டாதது போலவும், கொச்சைப் பதங்களை மிகுத்துப் பேசும் குழவியின் மழலைமொழியின் மதுரம் நோக்கித் தாய்தந்தையர் அதன் வழூஉச் சொற்களைப் பாராட்டாதது போலவும், சொல்லிய சொல்லே திரும்பச் சொல்லும் கிள்ளைமொழியை கேட்போரெல்லாம் உள்ளம் விழைந்து உவப்பது போலவும் வேதாகமமுடிவிற் பேசப்பட்ட இவ்வரும் பெரும் விஷயத்தின் சிறப்பை நோக்கி அடியேன் இப்பிரசங்கத்திற் காணப்படுங் குற்றங்கள்ளைப் பொறுத்துக் கொள்வீர்களென்று என் மனமொழி மெய்களாற் சிந்தித்து வந்தித்து வணங்கி வேண்டிக்கொள்ளுகின்றேன்.

உலகத்திலேயுள்ளார் இம்மை மறுமைப் பயன்களைக் கருதி பொன், வெள்ளி, இரத்தினம் என்பவற்றாலும், பிறவற்றாலும் செய்யப்பட்ட பூஷணங்களைத் தரித்து வருதற் பிரத்தியட்ச மன்றோ, அவைகள் காலதேச வேறுபாடுகளால் வேறு பட்டனவாய், அணியப்படுவன, சூடப்படுவன, கட்டப்படுவன, தொடுக்கப்படுவன, முடிக்கப்படுவன, கவிக்கப்படுவன எனப் பலவகையாகத் தோன்றும். அவ்வாறாய பூஷணங்கள் பலவும் லௌகிக பூஷணமெனப்படும். அவற்றையணிதலால் வரும் பலன் மிகுதியும் அற்பமாகும். தீமையோ மிகுதியும் அளவிறந்தன வாகும்.

முற்றறிவும் முற்றுத்தொழிலுமுடைய பரமாப்த பதியாகிய சிவ பெருமானாலே திருவாய்மலர்ந்தருளப்பட்ட வேதாகம சம்பந்த முள்ள வைதிக பூஷணமாய், தன்னையணிந்தார்க்கு எஞ்ஞான்றும் நன்மையினையே பயந்து தீமையையொழிப்பதாய், இம்மைப் பயனுடன் யாவரானும் அடைதற்கரிய மறுமைப் பயனாகிய அத்துவித முத்திப் பெரும் பேற்றையு மளிப்பதாய் விளங்கும் ஓர் பூஷணம் உண்டு. அது சைவபூஷணமே.

சைவம் = சிவசம்பந்தமுள்ளது : பூஷணம் = ஆபரணம் : எனவே, சிவசம்பந்தமுள்ள ஆபரணமே சைவபூஷணம் எனப்படும். அது விபூதி உருத்திராக்கம் என இருவகைத்தாம். அவ்விரண்டும் இறைவனிடத்தினின்றுந்தோன்றினமையானும், இறைவனது அருட்சத்தி பதிதலானும் சிவசம்பந்தமுள்ள பூஷணம் (சைவபூஷணம்) எனப்பட்டது. தயிரிடத்து நெய் விளங்கித் தோன்றுதல் போலவும், விறகினிடத்து நெருப்பு விளங்கித் தோன்றுதல் போலவும், இப் பூஷணங்களிடத்துச் சிவம் விளங்க நிற்றலின் அங்ஙனஞ் சிறப்புப் பெயர் பெறும். அன்றியும் விபூதி உருத்திராக்கங்கள் சிவசின்னமெனவும், திருவேடம் எனவும்படும். இதனை

செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலங்கழீ இ யன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமு
மாலயந் தானு மரனெனத் தொழுமே

எனச் சிவஞானபோதஞ் செப்புதலால், அவை இரண்டுஞ் சிவபெருமானென்றே கோடற்குரியனவாம்.

காமக்கிழத்தியரது வடிவிலே காணப்படும் ஆடை, சாந்து, அணிகலன், முதலாயின தாமுகரை வசீகரித்து இன்பஞ்

செய்யுமாறு போல, மெய்யுணர்வுறுவாரைக் காட்சி மாத்திரையானே வசீகரித்து இன்பஞ் செய்தல்பற்றிச் சிவபக்தி யுடையார்க்கு இவை திருவேடமாகக் கொள்ளப்பட்டனவாம்.

சேலுங்கயலுந்திளைக்குங் கண்ணாரிளங் கொங்கை
யிற்செங்குங்குமம்
கோலும் பொடியணிமார்பிலங்கு மென்று புண்ணியர்
போற்றிசைப்ப

என்னும் திருப்பல்லாண்டினாலும் உணர்க.

அக்கினி சிவபெருமானது வடிவமாகும். சந்திரன் அமிர்த மென்று கூறப்படுவன். இவ்வுலகங்கள் யாவும் அக்கினியாற் சுடப்பட்டு வெந்து சாம்பரானமையாற்றான் அது பரிசுத்த மடைந்தது. அக்கினியிடத்து அவி பெய்து உயர்வை யடைந்தவர்கள் விபூதி தரித்தலாகிய பாசுபத விரதத்தை யநுட்டித்தனர். உலகம் அக்கினி சொரூபமே. அவ்வக்கினி சிவரூபமான திவ்விய வடிவமேயாக, சந்திரன் சிவசத்தி வடிவாகும். பரிசுத்தம் வாய்ந்த சிவாக்கினியிடத்தினின்றுந் தோன்றிய விபூதியைச் சிவபெருமான் தமது திருமேனியின் கண்ணே தரித்தமையினால், அது பரிசுத்தமுள்ளதாய், அமிர்தம் போல எவராலுங் கைக்கொள்ளப்படுவதாய், புத்தி முத்திகளைக் கொடுப்பதாயுள்ளது.

ஆதலாலுலகமழலினல் வடிவேயவ்வழலெமதுருவாமாற்
கோதறுசோமன்றேவிநல்வடிவாங்கொழுஞ்சுடரழலிடைப்
பட்ட
யேதமினீற்றையெமது மெய்யணிவோ மெறிதிரைக்
கருகடலுடுத்த
தீதிலாவுலகநீற்றினையணிந்தே தீர்த்திடுந்தீவினைச்
சிமிழ்ப்பே

என்று கூறிய இலிங்கபுராணத்தானே அவ்வுண்மை புலப்படும்.

உருத்திராக்கத்துள்ளே கௌரிச்சங்கர மெனப்படுவது அர்த்தநாரீசுர வடிவமாம் என்பது நன்கு புலப்படுகின்றது. சிவஞ் சத்தியென்னும் இரண்டும் அபேதமாக இருக்கின்றன வென்பதை அது கொண்டுணறற்பாற்று. கௌரிசங்கரமென்னும் பெயரானுந் தெரிக.

முன்னர்க் கூறியபடி விபூதி ருத்திராக்கங்கள் சிவவடிவ மென்று அறியப்படுவதன்றி, வேறுவிதமாகவுந்துணியப்படும். விபூதி வெண்ணிறமாகவும், உருத்திராக்கம் கருமை முதலியு

பல நிறங்களாகவும், காணப்படலான். விபூதி வெண்ணிறமுடைய சிவரூபமாகவும், உருத்திராக்கம் கருமை முதலிய நிறங்களை யுடைய சத்திவடிவமாகவும் எண்ணப்படுகின்றது. இதனாற் சிவமுஞ் சத்தியுங் கூடியவழி எல்லாமாகுமென்பது பெறப்படும். சிவம் சத்தி என்னும் இரண்டானுமே முத்தி கைகூடுமென்பது இவற்றின் காரணத்தாற் தெரிகின்றது.

சிவசின்னங்கள் சிவமென்று துணியப்பட்டமையால் அவற்றை நிந்திப்பவர் சிவபெருமானை நிந்தித்தோராவர் பிரமகத்தி, கோகத்தி, சிசுகத்தி ஸ்திரீகத்தி முதலிய மாபாதகங் களையெல்லாம் போக்கவல்ல சிவசின்னங்களை நிந்திப்பவர்க்குப் பிராயசித்தமில்லை. எவருக்குச் சிவசின்னங்களில் நம்பிக்கை யுண்டாகவில்லையோ, அவர்க்குக் கருப்பாதான முதலிய வைதிகக் கிரியைகள் இல்லையென்று ஜாபால உபநிடத முரைக்கின்றது. எஞ்ஞான்றும் அவற்றைத் தரித்த பெரியோர் களை எந்தக் கீழ்மக்கள் நிந்திக்கின்றார்களோ, அவர்களை அரசன் ஆராய்ச்சியின்றித் தண்டிக்கக் கடவன் என்று "பஸ்மச்சந்நசர்வாங்கம்" என வருஉஞ் சுலோகத்தாற் பராசரஸ்மிருதி தெரிக்கின்றது. வேதத்தில் விதிக்கப்பட்ட திருநீற்றையும் கண்டிகையையும் பிராமணனேனும் அத்தியாச் சிரமியேனும் அணியாது விடுவனேல் அவன் பதிதனாவன் என்று கந்தபுராணம் உரைக்குமேல், அவற்றை நிந்திப்பார்க்கு உய்தியென்னோ! எவனுக்குச் சிவசின்னங்களில் வெறுப் புண்டாகுமோ, அவனது பிறப்பிற் சாங்கரியமுண்டு என்று பண்டிதர் ஊகிக்கவேண்டும் என்பது பராசரவாக்கியம். சிவசின்னங் களையாவது அவற்றைத் தரித்தவரையாவது நித்திப்பவர் யாவரோ அவருடைய வமிச பரம்பரை சங்கீரணமாய்விடும் என்று "யே பஸ்மதாரிணந் திருஷ்டவா" என வரும் சுலோகத்தால் வாசிட்டலைங்கபுராணம் உணர்த்திற்று. ஆதலாற் சிவ சின்னங்களை நிந்திப்பவர் அதிபாதகராய், எரிவாய்நரகிற்கு இரையாகிப்புழு, பன்றி முதலிய புன்பிறப்பெடுத்தெடுத்துழல்வர் என்பது சத்தியமே.

சிவபூஷணங்களாகிய விபூதி ருத்திராக்கங்களை யணிவோர் மேற்காட்டப்படும் மந்திரங்களைக் குருமுகமாக அறிந்து தரிக்க வேண்டும். அவையாவன :- சுத்தப்பிராசதம், மூலப்பிராசதம், தத்துவப்பிராசதம், ஆதிப்பிராசதம், ஆன்மப்பிராசதம் என்னும் ஐவகைச் சிருட்டி ரூபசிவமந்திரங்களும், மோக்கதம் அபிவிர்த்தி, காமியம், சாந்திகம், பௌட்டிகம் என்னும் ஐவகைத் திதிரூப சதாசிவ மந்திரங்களும், மூவகைச் சங்காரரூப மகேசுரமந்திரங்

களும் சாகல்லியப்பிரணவும், சௌக்கியப் பிரணவம், சாம்பவப், பிரணவம், சருவவசிப்பிரணவம், சாயுச்சியப்பிரணவம், என்னும் ஐவகைப் பிரணவமந்திரங்களும், மூலபஞ்சாக்கரம், தூலபஞ்சாக்கரம், குக்மேபஞ்சாக்கரம், காரணபஞ்சாக்கரம், மிசிரபஞ்சாக்கரம், தாரபஞ்சாக்கரம், முத்திபஞ்சாக்கரம், மாயாக்கியபஞ்சாக்கரம், பிராசாதபஞ்சாக்கரம், நின்மலசாக்கிர பஞ்சாக்கரம், நின்மலசொப்பனபஞ்சாக்கரம், நின்மலசுழுத்தி பஞ்சாக்கரம் நின்மலதுரியபஞ்சாக்கரம், நின்மலதுரியாதீத பஞ்சாக்கரம் என்னும் பதினான்குவகைப் பஞ்சாக்கர மந்திரங்களும், சடக்கரம், அட்டாக்கரம், நவாசஷிரி, தசாசஷரி, பஞ்சதசாசஷரி என்னுந் தேவ மூல மந்திரங் களும், சிவாஸ்திரம், சஷுரிகாஸ்திரம், பாசுபதாத்திரம், வியோமாஸ்திரம், அகோராஸ்திரம் என்னும் ஐவகை அத்திர மந்திரங்களும், ஈசானாதிபஞ்சப்பிரம்ம மந்திரங்களும், காயத்திரி, மிர்த்தியுஞ்சயம், தக்கிணாமூர்த்தி மந்திரம், சரப விக்கினேசுர, வைரவ, வீரபத்திர, சுப்பிரமணிய, வித்தியேசுர, துவாரபாலக, பிரம, விட்டுணு, சூரிய, தேவாதிமந்திரங்களும், துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி, புவனேசுவரி, அசுவாரூடி, திரிபுராம்பிகை முதலிய மகாசக்தி மந்திரங்களும், சித்தசாவரர், சத்திசாவரர், மேருதந்திரர், சாகினி தந்திரர், இடாகினிதந்திரர், கர்மாண்டர் சல்லியர், முதலாய சித்தமந்திரங்களும், ஏனைய கிரியாமந்திரங் களும் ஆம். இவை உபதேசக்கிரமமாக அறியற்பாலனவாம். இது நிற்க.

விபூதி என்னும் பதத்தில் வி = மேலான, பூதி - ஐசுவரியம் எனப் பொருள்கொள்வதன்றி, விநாயகன், என்றாற் போலத் தனக்கு மேலான ஐசுவரியமில்லாதது எனவும் விரிப்பர். இவையன்றி, வி = சிவபெருமான், பூ = பாவனை, தி = அடைதல் எனக்கொண்டு சிவத்துவ பாவனையை விளக்கும் இயல்புடையது என்று ஆகமங்கள் விசேடப் பொருள் கூறுகின்றன. அவ் வுண்மையை "வேர்ப்பாவ நம்ய தோக்கியே ஷாதிக்நோதீதி விபூதிஉறி, தஸ்மாத் சிவாத்மகத்வம்ச விபூதே : கீர்த்யதே சதா" என்னும் வாதுளாகம வாக்கியங்கள் தெரிந்தன. இத்துணை விசேடம் வாய்ந்த சிவரூபமாகிய விபூதியின் மகிமையை எடுத்துரைத்தற்கு முன், இதற்கு வாச்சியமாகிய சிவத்தின் இலக்கணத்தைச் சிறிது அநுவதித்துப் பின்னர் விபூதியின் மகிமையைப் புகல வேண்டுமென்பது அத்தியாவசியகமாதலின், அதனைச் சிறிதெடுத்துரைப்பாம்.

... ப்ரத்யுயசாரம் ப்ரபஞ்சோத சமம் சாந்தம் சிவமத்வைதம் சதுர்த்தம் மந்யந்தே.

என அதர்வணவேத மாண்டுக்கியயோபநிஷதமும்,

ஏகாத்ம ப்ரத்யயஸாரம் ப்ரபஞ்சோபசமம் சிவம் சாந்த மத்வைதம் சதுர்த்தம் மன்யந்தே.

என நாரத பரிவிராஜகோபநிஷதமும்,

சாந்தம் சிவமத்வைதம் சதுர்த்தம் மந்யந்தே.

என்று நரசிம்மதாபநியோபநிஷதமும்,

அத்வைதம் சதுர்த்தம் ப்ரஹ்ம விஷ்ணு ருத்ராதீநமேகமாசாஸ்யம் பகவந்தச்சிவம்.

என்று பஸ்மஜாபாலோபநிஷதமும் முறையிடுவதற்கிணங்கப் பிரமன், விஷ்ணு, சிவன் என்னும் மூவருக்கும் மேலான பரமசிவன் சர்வஞ்ஞத்துவம், சர்வகர்த்திருத்துவம், சர்வாநுக்கிரகம் ஆகிய இம்மூன்றிலக்கணங்களையும், ஒருவராற் கொடுக்கப்படுதலின்றி, தமக்கியல்பாக வுடையவரென்று சர்வ வேதாந்தங்களிலும் கூறப்படுகின்றன. இப்பரமசிவன் சகுண நிர்க்குண பாவனைகளைக் கடந்த பிராம்மி பாவனையாலுணரப்படும். உமாசமேதர், இப்பரம்பொருளைவேதம் பலவிடங்களிலும் திரிமூர்த்தியுத்தீரணராயுள்ள நான்காவதான (சதுர்த்தம்) என்று சாற்றுகின்றது.

தேவர்கோவறியாத தேவதேவன்
செழும் பொழில்கள் பயந்து காத்தழிக்குமற்றை
மூவர்கோனாய் நின்றமுதல்வன்மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத்தெந்தையாவர்கோன்

என்பதனால் மூவருக்கும் தலைவனாகிய ஆதிபுருடரும், அஷ்டமூர்த்தியாயிருப்பவரும், யாவருக்கும் பாட்டனானவரும் உமாமகேசரா மென்று அறியப்படுகின்றது. இது பரமகருணாமயத் திருமேனியாயும், முத்தொழில்களும் தனது சந்நிதியில் நடைபெற்று விளங்கச் சாட்சிமாத்திரமாயும், முக்குணங்களிற் றோய்ந்துள்ள மும்மூர்த்திகளுக்குப் பரமாயும், மனோவிர்த்திகளுக் கெட்டாத நின்மலமாயும், ஆதியந்தமில்லாத தனி முதலாயும், விபுவாயும், சிதாநந்த ரூபமாயும், உள்ளதோர் வடிவாம். இவ்வடிவம் நித்தியவிபூதி மயமாய் விளங்கும் ஸ்ரீ சோமலோக மென்னும் மகாசிவலோகத்திலே எழுந்தருளியிருக்கு மிருப்பு. இது மகா சிவலோகத்தில் மாத்திரமன்று

யோகிகள் இருதய கமலத்தும் மகா சிதம்பரத்தும், அன்பர்கள் பரிபாகத்துக்குத் தக்கபடி ஆங்காங்கு ஆவிர்ப்பவித்தும் நித்திய சொயம்பிரகாச சொரூபமாய் விளங்கிக் கொண்டிருக்கும். 'மாதாளும்பாகம்'' என்பதில் ''மாது'' என்பது உருத்திரனது சத்தியாய உருத்திராணியன்று: மற்று உலகமீன்றருளிய பராசத்தியெனப் படும் பேரின்பமயமான பிரமவித்தியா தேவியாம். இந்தந் தேவியே தேவேந்திரனுக்கு யட்சதத்துவம் போதித்த பெருமாட்டியெனக் கேநோபநிடதம் புகலும். இவ் வம்மையைப் பரசிவசத்தியெனவும், மாதேவன் பாகத்தாய உமையம்மை எனவும், ஆரணமுடிகளனைத்தும் ஒருங்கு சேர்ந்து அறையா நிற்கும். உமாவென்னுஞ் சொல், உகார, மகார, அகாரங்களாகிய வியஷ்டிப் பிரணவத்தில் அதற்கியல்பி லமைந்த அகார உகார மகாரங்களாகிய மாத்திரைகள் முறை பிறழ்ந்து, உமா எனக் தேவியார் திருநாமமாய் நிற்கும். இது பற்றியே ''கிருஷ்ண பிங்களம் = கருமையுஞ் செம்மையுங் கலந்த திருமேனி'' எனவும், ''உமாபதயே, பசுபதயே = உமையின் பதிக்கு: பசுபதிக்கு'' எனவும் தைத்திரீயோப நிடதஞ் செப்பியது. இங்கு மாதாளும் பாகங் குறித்தமையாற் காளகண்டம், கண்ணுதல் முதலிய மற்றை இலக்கணங் களுந் தழுவப்படும்: இவ்வித இலக்கணங்களை வேறு எக்கடவுளுக்கும் எவ்விடத்தும் எச்சமயத்தும் வேதங்கள் கூறியவன்று: சிவபெருமானொருவனுக்கே இயல்பிலமைந்த அசாதாரண இலக்கணங்களாகவும், நற்காரண வாக்கியங்களாகவும், ஒருங்கு சேர்ந்து கூறியுள்ளன. அவற்றுட் சிலவருமாறு :-

(1) ருதம் சத்யம் பரப்ரஹ்ம புருஷம் கிருஷ்ண பிங்களம்! ஊர்த்வரேதம் விரபாசஷம் விஸ்வருபாய வைநம := மெய்யினரும் சத்தியரும் பரப்பிரம சொரூபரும், புருஷரும், கருமையுஞ் செம்மையுங் கலந்த திருமேனியுடையவரும், ஊர்தவ வீரியம்உடையவரும் விசுவருபருமாயுள்ளார்க்கு நமஸ்காரம் (தைத்திரீயோபநிடதம்)

(2) ருதம் சத்யம் பரப்ரஹ்ம புருஷம் க்ருஷ்ணபிங்களம்! ஊர்த்வரேதம் விருபாசஷம் சங்கரம் நீலலோஹிதம்! உமாபதி பசுபதி: பிநாகஹ்ய தித்யுதி: மெய்யினரும் சத்தியரும்: பரப்ரம சொரூபரும், புருஷரும் கருமையுஞ்செம்மையுங் கலந்த திருமேனி யுடையவரும், ஊர்த்வ வீரியமுடையவரும், விருபாட்சரும், சங்கரும் நிலலோகிதரும் உமாபதியும், பசுபதியும், பிநாகியும், அளவில் பிரகாசமுள்ளவரும் என்றது (நரசிம்மதாபநியோப நிடதம்)

(3) ருதம் சத்யம் பரப்ரஹம ஸர்வ ஸம்சார பேஷஜம்! ஊர்த்வரேதம் விரூபாட்சம் விஸ்வரூபம் மஹேச்வரம்மெய்யினரும், சத்தியரும், ப்ரப்ரஹம சொரூபரும் புருஷரும், சர்வசம்சாரப் பிணிக்கு மருந்தினரும், ஊர்த்வ வீரியமுடையவரும், விருபாட்சரும், விஸ்வரூபரும் மகேசுவரரும் என்றது (தரிசனோபநிடதம்)

(4) த்ரிலோசதம் உமார்த்தகே ஹம்வரதம்=முக்கண்ணரும் உமைபாகரும், வரதரும் (யோகதத்வோபநிடதம்)

(5) பஞ்சவக்த்ரமுமாஸஹாயம் நீலகண்டம் ப்ரசாந்தம்=ஐந்து முகங்களுடையவரும், உமாசகாயரும். நீலகண்டரும், பரம சாந்தரும். (மண்டல ப்ராஹ்மனோபநிடதம்)

(6) உமாசகாயம் பரமேஸ்வதம் ப்ரபும்! த்ரிலோசன நீலகண்டம் பிரசாந்தம் (கைவல்லியோபநிடதம்)

(7) த்ரிணேத்ரம் த்ரிகுணுதாரம் த்ரலாணம் ஜநகம் ப்ரபும் (ப்ருஹஜ்ஜா பாலோபநிடதம்)

(8) ஓங்கார ஸ்வாபிணம் மஹாதேவ முமார்த்த க்ருத சேகரம்! ஸோமசூர்யாக்நி நயநம் (பஸ்மஜாபாலோபநிடதம்)

இன்னணம் அளவில்லாத வசனங்கள் ஆரணமுடிகளில் விரிந்து கிடக்கின்றன. சாந்தோக்கியம், பிரகதாரண்ணியம், தைத்தீரியம் முதலிய உபநிடதங்களில் தகரோபாசனா மூர்த்தி யாகப் புகழப் பெற்றவர், பிரமனோ, விஷ்ணுவோ, ருத்திரனோ, சத்தியோ, அக்கினியோ, சூரியனோ, வாயுவோ, மற்றியாரோ வென நிகழுமைய மறுக்குமாறு மேற்காட்டிய உபநிடத வசனங்கள் யாவும் ஒருங்கெழுந்து தகரவித்தியாத் துரியப்பிரமம் உமாசகாயம், திரிநேத்திரம், நீலகண்டம் முதலிய அற்புத வடையாளங்கள் அமையப் பெற்றுள்ள ஒப்புயர்வில்லா மங்கள விக்கிரகமென முழக்குகின்றன. இதனாற் சர்வான்மாக்களுக்கும் உபாஸ்யப் பொருளாயுள்ளவர் சிவபரம்பொருளென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நிரூபிக்கப்பட்டது. அல்லாமலும் தைத்திரீயோபநிடதமானது துரிய மூர்த்தியாகிய சிவபிரானுக்குச் சத்தியோஜாதமுதல் ஈசானம் இறுதியாயுள்ள பஞ்சப் பிரம மந்திரங்களைக் கூறி, "ஹ்ரண்யபதயே அம்பிகாபதயே, உமாபதயே, பசுபதயே நமோ நம:" என்று துதித்துப் புகழ்ந்தமையாற் சிவபிரானைத் தவிர வேறு எக்கடவுளரையும் அவ்வுபநிடதமானது உபாஸ்யப் பொருளாகச் சிறப்பித்தோத வில்லை என்பது பரம சித்தாந்தமாயிற்று. இவ்வாறு வாத

விஷயம்வரம்பின்றிச் செல்லும் பெற்றிமையுடைமையால், மற்றொன்று விரித்தலென்னும் தோஷசம்பவத்தினின்றும் காக்கும் பொருட்டு ஈண்டு எடுத்துக் கொண்ட விஷயத்திற் செல்வாம்.

இனி விபூதியின் பெருமைகளையெடுத்தும் பொதுவாகவும் சிறப்பாகவும் விதந்து பேசும் நூல்கள் இவையெனக் கணிக்கப்புகுதல். உலகத்தில் இதுகாறும் பிறந்து இறந்தவர்கள் இவ்வளவினரென்று ஒருவன் கணக்கு எடுக்கப் புகுதல் போலாகும்.

அவற்றின் பெருமைகளை யெடுத்துரைக்காத தொன்னூல்கள் இல்லை, தமிழ் நூல்களெவற்றினும் அதன் பெருமை புலப்படும். புறச்சமயிகளாகிய சமணரும் "இடுநீற்றாற்பைய விந்த நாகம் போற்றத்தங்குடிமையான் வாதிக்கப்பட்டு" எனத்தமது வேளான் வேதமென்னும் நூலினும் ஆங்காங்கும் அவற்றின் பெருமையைப் புகழ்ந்துள்ளார். அவ்வாறே சூடாமணி நிகண்டுடையார் ஆகிய மண்டல புருடரும் தாஞ் சமணமதத்தராயவிடத்தும் விபூதியையே சிறப்பித்து "திருநீறே பற்பம், பொடியொடு விபூதிகாப்பாம் புண்ணிய சாந்தம் சாணி, என்று கூறியுள்ளார்.

வடமொழியில் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேத சாகைகளாகிய காலாக்கினி ருத்திரோபநிடதம், அதர்வசிரோபநிடதம், சாண்டில்லியோபநிடதம், ஜாபால்வுபநிடதம், பிருக்கச்ஜாபால உபநிடதம், பஸ்மஜா பாலோபநிடதம், கைத்திரியோபநிடதம், சுவேதாச்சுவதர உபநிடதம், வாசுதேவோபநிட்தம் என்பவற்றிலும் விபூதிமான்மியம் உரைக்கப்படுகின்றது.

இன்னும் காமிகாதி வாதுளாந்தமானசிவாகமங்கள் இருபத்தெட்டினும் அவற்றின் பிரிவுகளாகிய சாரோத்தரம், சாலபேதம், சசிமண்டலம், மகாவித்தயம், துலாவிருத்தம், காலதகனம், குமார தந்திரம், மகிடோத்தரம், இருத்தகாசம், நீலபத்திரம், கலாபேதம், சீமுகம், சிவசாசனம், விலேகன தந்திரம், நந்திகேசுரம் மகாந்தசங்கிதை, மகாகாளம், பிரபுத்தாகமம், வீணாசிகோத்தரம், தாரதந்திரம், பரோற்பூதம், பதுமசாங்கிதை, பாவநாசகம், வீமதந்திரம், சுபோதம், பார்வனம், பார்வதிதந்திரம், பிரகரணாகமம், காசிபபம், வாமதந்திரம், காருடம், நைருதம் சிவதருமோத்தரம், மதங்கம், விசுவான்மகம் முதலிய உபாகமங்களினும், சாங்கியாயனகுகியம், மத்தியந்தன குகியம், போதானகுகியம் என்னும் வேத சாரங்களினும், சூத்து

வாச, சாதாதப, பராசர, கௌதம, மனுவாதிஸ்மிருதிகளினும், இலிங்க, சைவ, காந்த, காருட, மற்ச, ஆதித்த, பிரமாண்ட, பதும, கூர்ம முதலிய மகாபுராணங்களினும், பாரதம், ராமாயணம் என்னும் இதிகாசங்களினும், சிவரகசியம் என்னும் பரமேதிகா சத்தினும் ஏனைய பற்பல நூல்களினும் விபூதியின் பெருமை கூறப்பட்டுள்ளது.

மேற்கூறிப்போந்த சுருதிகளுட் சில உதாரண முகத்தான் நுகலிப்புகல்வாம். திருநீறு தரிப்பதனுலுண்டாகும் பயனை பிருகஜ்ஜாபாலோபநிடதமானது "பஸ்மதாரணஞ் செய்வதினுலேயே மோக்ஷமுண்டாகின்றது. சிவசாயுஜ்யமும் அடையப் படுகின்றது. அவன் மீளத்திரும்புகிறதில்லை. அவன் மீளத் திரும்புவகிறதில்லை" என்னும் பொருள் தோன்ற, "பஸ்மதாரண தேவமுக்திர் பவதி. சிவசாயுஜ்யமவாப் நோதி. நஸபுநராவர்த்ததே. நஸபுநராவர்த்ததே" என்று கூறிற்று. இதனால் பஸ்மகாரணமே பாபக்ஷயஹேது என்பதூஉம், மோட்ச பலமென்பதூம் நன்கு நிரூபிக்கப்பட்டது. எல்லாக் கன்மங் களுக்கும் இதுவே முக்கியாங்கமாகவும், ஞானாங்கமாகவும், இருக்கின்றமையால் வேதத்திலுள்ள கன்மகாண்டத்திலும் ஞான காண்டத்திலும் இதுவே புகழப்பட்டிருக்கின்றது. "பூத்யை நப்ரமதிகதவ்யம் - பூதியையணிதலின்றும் நழுவுதல் கூடாது" என்று தைத்திரியோபநிடதமானது பஸ்மதாரணத்தைத் தெளிவாய் விதித்திருக்கின்றது. திருநீற்றுக்குரிய பெயர்களுந்தனுள் பூதியும் ஒன்றாதலால் அது பஸ்மமென்பதே சர்வ வேதாந்த ரகசியமாம். ஐச்வர்யகாரணாத்பூதி ஐசுவரியத்துக்குக் காரணமா யிருத்தலாற் பூதியெனப்படும்." என்றுபிருகஜ்ஜா பாலோப நிடமே அப்பொருளை விளக்குகிறது ஆதலின் பஸ்மதாரணம் வேத சம்பந்தமான வைதிகமாம்.

அன்றியும் "யதிகளுக்கு ஞானத்தைத் தருவதாயும், வானப் பிரஸ்தர்களுக்கு வைராக்கியத்தைக் கொடுப்பதாயும் உள்ளது" எனப் பொருள்கொண்டு "பூதிநாம் ஜ்ஞானதம் ப்ரோக்தம் வனஸ்தா நாம்வ்ரக்திதம்" என்றும், "எவர்கள் பஸ்ம தாரணத்தை விட்டுக் கன்மத்தை அநுட்டிக்கின்றார்களோ அவர்களுக்கு கோடி ஜன்மங்களிலும் சம்சாரத்தினின்றும் விடுதல் எய்தாது" எனப் பொருள்பட "யேபஸ்மதாரணம் தீயக்வா கர்மகுர்வதிதமாதவா ; ஹோம் நாஸ்திர் மோக்ஷ ஸம்ஸாரஜ்ஜன்ம கோடிபி ; என்றும், "இதுவே விஷ்ணுவுக்கும் சங்கரருக்கும் ஞானத்தைப் புகட்டியது பிரம்மஹத்தி முதலிய பாவங்களைப் போக்க வல்லது. மிக்க ஐசுவரியத்தைக் கொடுக்கக்கூடிய

தென்றே (துரிய) சிவனது மார்பிலணியப் பெற்றது'' எனப் பொருள் விளங்க "ஏதுதேவ ஹரிசங்கர யோர் ஜ்ஞானப்ரதம். ப்ரம்மஹத்யோதி பாபநாசகம் மஹாவிபூதி தமதி சிவவசக்ஷு ஸ்ஸ்திதம்'' என்றும் மேற்சொன்ன ஜாபாலோபநிடதமே விதந் தெடுத்துக் கூறுமாயின், இந்தத் திருநீற்றின் பெருமை அளவிட்டுக் கூறுந்தகைமையதோ! மகாபாதகங்களோடு கடினவனுக்கும்பூருவ சென்மங்களிலே அநேக அபராதமிழைத்தவனுக்கும் திரிபுண்ட ரோத்தூளனத்தில் திருடமானது வேஷமுண்டாகின்றது என்னும் பொருள்போதர "மஹாபாதக யுத்தாநாம் பூர்வஜந்மார் ஜிதாகஸாம், த்ரிபுண்ட ரோத்தூளன த்வேஷோஜாயதேஸ ்த் ருடம் புத:'' என்று பிருகஜ் ஜாபாலோபநிடதம் வெள்ளிடைமலை போல் விளக்கியபடியால் பாஷாண்டிகளாகிய பாவிகளுடைய ஊழின் வலியைத் தடுக்க யார்தாம் வல்லவர். "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று, சூழினுந்தான்முந்துறும்'' என்று திருவாய் மலர்ந்தருவிய தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரது திருவாணையும் பொய்க்குமோ! ஸ்ரீ வாகீசப்பெருந்தகையாரும் "தாயினும் நல்ல சங்கரனுக்கன்ப, ராயவுள்ளத்தமுதருந்தப் பெறார், பேயர் பேய்முலையுண்டுயிர் போக்கிய, மாயன் மாயத்துப் பட்டமனத்தரே'' என்று இவ்வஞ்ஞானிகளினது நிலைமையை வெளிப்படையாகக் கூறியருளினார். எல்லாவற்றை யும் அநுஷ்டித்தற்குச் சாதனமாகிய உடம்பை நிலைபெறச் செய்வதற்கு வேண்டப்படுவனவற்றைக் கூறுகின்ற ஆயுர்வேதமும் வியாதிகளுக்குப் பரிகாரமாகச்சொன்ன "மணிமந்திர ஔஷதம்'' என்னும் மூன்றனுள் திருநீறே ஔஷதமாதலின் உயிர்ப்பிணியும், உடற்பிணியும், பவப்பிணியும் ஒருங்கேயறுப்பதும், பூசவும் பூசிக்கவும் மருந்தாவதும், அதுவே எனவியந்தது. "திருநீறு இட்டு யார்கெட்டார் சிவனைமறந்து யார் உய்ந்தார்'' என்னும் பழமொழியையும் யூகித்துணர்க. ஆதலின்றோ (திக்பஸ்மர ஹித்ம் பாலம், திக்கராமமசிவாலயம்) "பஸ்மமில்லாத நெற்றியைச் சுடு சிவாலயமில்லாத கிராமத்தைக் கொளுத்து'' என்று இடித் துரைத்தது பிருஜ்ஜ்ஜாபாலோப நிடதம். ஔவைப்பிராட்டியாரும் "நீறில்லா நெற்றிபாழ் என்று கூறியருளினர். இதனால் உலகத்தை வெறுத்து மோட்சமே பொருளென நிற்கும் சன்னியாசியும் திருவெண்ணீற்றைத் தள்ளொண்ணாதென்பது பசுமரத் தாணியறைந்தாலொப்ப நாட்டப்பட்டது. ஆதலின்

"பஸ்மோத்தூ ளனம் பரமஉறம்ஸஸ்ய'' "பஸ்ம உத்தூளனம் பரமஉறம்சனுக்கு முரியது "என்று நாரத பரிவிராஜகோபநிடதமும், சந்நியாசோபநிடதமும் கூறியு, அல்லது உம் மேற்குறித்த பிருகஜ்ஜாபாலோபநிடதமே.

ஸ்ரீ கௌதம விவாஹகாலே தாமஹல்யாம் தீருஷ்ட்வா ஸர்வதேவா! காமாதுரா அபவந் ததா நஷ்மிடஜ்ஞா நா துர்வாஸம் கத்வா பப்ருச்சு :'' என்றெழுத்து செல்லும் வசனங்களிற் கௌதமரது விவாககாலத்தில் அகலிகையின் பேரழகைக் கண்டு சகல தேவர்களும் காமனாற் வடிக்கப்பட்டு ஞானத்தை யிழந்தார்களெனவும், அப்பொழுது அவர்களனைவரும் துர்வாசரை யடைந்து பாப விமோசனார்த்தமாகப் பரிகாரங்

கேட்க அவர் பஸ்மாவைக் கொடுத்தாரெனவும், அதை வாங்கித் தேகமுழுமையும் பூசிக்கொண்டு ரஜோகுணத்தினின்றும் நீங்கி மிக்க தேஜசு உடையவர்களானார்களெவும், பின்னர் அச்சுதரானவர்

"பஸ்மாபசஹய தச்சுயத :''

என்னும் வசனத்தின்படி அந்தப் பஸ்மத்தை மருந்து போல உட்கொண்டாரெனவும், அங்ஙனம் உட்கொண்டு ஆனந்த பரவசராய்ச் சிவபெருமானைத் தியானித்து

"நமஸ்தேஸ்து நமஸ்தேஸ்து தீவாமஉறம் சரணம் கத : "நமஸ்காரம், உனக்கு நமஸ்காரம், உன்னை நான் சரண மடைந்தேன்'' எனத்துதித்து,

தீவத்பாதயுகளே சம்போ பக்திரஸ்து ஸதாமம
"ஓ சம்புவே ! உமது பாதகமலங்களிரண்டினிலும்
எனக்கெப்பொழுதும் பக்தியிருக்கட்டும்''

என்றும்,

"பஸ்மதாரண சம்பந்நோ மமபக்தோ பவிஷ்யதி எனது பக்தன் பஸ்மதாரணத்துடன் கூடினவனாய் ஆகக்கடவன் என்றும் விண்ணப்பித்து சிவப்பிரசாதமெய்தினாரெனவும் கூறுகின்றது.

அன்றியும்,
பஸ்மதிக்தாங்கா ருத்திராசஷாபரணா :
தசஷிணாயாந் திசிவிஷ்ணு :

எனவரும் அதர்வணவேதம் பஸ்மஜாபால உபநிடத சுலோகத் தானும்,

"த்யக்த்வா ரகுபதிம் க்ருத்தம்
காலாநல மிவாபரம்

ஸ்ரீக்ருஷ்ணா ஜிநதரம்
ப்ஸ்மோத் தூளந விக்ரஹம்''

என்னும் இராமாயண சுலோகத்தானும்

''வெந்தாரென்புஞ்
சுடுநீறுமெய்யிற்பூசி
கூத்தன் பொடியாடி
நீற்றாணிழன்
மணிவண்ணத்தான்''

என ஆழ்வார்கள் பிரபந்தத்தானும் திருநீற்றின் மகிமை யளவிறந்தனென்பது நிரூபிக்கப்பட்டது.

இதுகாறும் கூறிப்போந்த பிரபல சுருதி பிரமாணங்களன்றி எத்தகைய பாவஞ்செய்தார்களேனும், யாவராலும் இகழத்தக்க பாதகங்களின் மேம்பட்ட பஞ்சமாபாதகர்களேனும் திருவெண்ணீற்றைத் துதிப்பார்களாயின், செல்வமுடையவர் களாயும், உலக முழுமையும் துதிக்கத் தீமை யொழிந்தவர் களாயும், பரிசுத்தர்களாயும் விளங்குவர்கள்.

''யாது பாதகம்புரிந்தனராயினுமிகழும்
பாதகங்களிற் பஞ்சமாபாதகரெனினும்
பூதிபோற்றிடிற் செல்வராயுலகெலாம் போற்றத்
தீதுதீர்ந்தனர் பவித்திரராகியே நிகழ்வார்''

என்று கூறிய உபதேசகாண்டச் செய்யுளானுமுணர்க.

இவ்விபூதி சிவபெருமான் திருமேனியினின்றும் தோன்றிற்றென்பது

ஆதிபகவன் ஞானவடிவழலிற் பூத்து நித்தியமா
யணிந்தோர் தமக்கு வசிகரமாயந்தினோர் கட்காரமுதாய்
நீதியறியும் பசுமயத்தை நீக்குமொருநற் குறிகாட்டி
நிகழ்பேரின்பக் கடலூட்டிநின்ற புகழ் வெண்டிருநீறே

என்னும் செய்யுளால் உரைக்கப்படும். பின்னும் இந்நீற்றின் உற்பத்திக்கிரம முதலியவற்றை முறையுடன் எடுத்துக் கூறுவோம்:

## விபூதி வரலாறு

திருவருளுருவாகிய உமாதேவியார் தமக்குப் பத்தினியாகத் தோன்ற, ஆன்மாக்களின் ஆணவமலத்தை நீக்கியருளும் வேதியராகிய சிவபெருமான் பிரளய வெள்ளமே நீராகவும்

அளவில்லாத அண்டங்களே மண்டபங்களாகவும், சமுத்திரத்தாற் சூழப்பட்ட பூவுலகமே வேதிகையாகவும், அரி, பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் யாவரும் அவியாகவும் ஏனைய உயிர்களே பசுக்களாகவும் கொண்டருளி, தமது நெற்றியாகிய குண்டத்தின் கணுள்ள அக்கினிக்கண்ணினின்றும் அக்கினியை மூட்டி யாகஞ் செய்தருளினர். அந்த யாகத்தினின்றும் தோன்றிய வெண் திருநீற்றை அகங்கார மமகாரமாகிய அகப்புறப் பற்றுக்கள் அழியுமாறு விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூவகையான்மாக்களுஞ் சரீரத்திற்றரிக்கும்படி அமைத்தனர் என நூல்கள் கருதிநிற்கும்.

## விபூதியின் பெயரும் காரணமும்

விபூதி, நீறு, பசுமம் (பற்பம்), பசிதம், சாரம், இரக்ஷை எனத் திருநீற்றுக்கு ஐந்து பெயர்கள் உண்டு. வி = மேலான, பூதி = ஐசுவரியம் எனவே, தன்னைத் தரித்தவர்களுக்கு அழிவில்லாத மேலாய ஐசுவரியத்தைக் கொடுத்தலான் விபூதியெனப் பெயர் பெற்றது. ஈண்டு ஐசுவரியமென்பது முத்திப்பேற்றினையேயாம். அதுவே மேலான ஐசுவரியமெனப்படும். பாவங்களை யெல்லாம் நீறாக்கலால் நீறெனவும் பசுமம், பற்பம் எனவுஞ் சொல்லப்படும். அறியாமை அழியுமாறு சிவஞானமாகிய சிவத்துவத்தை விளக்கலாற் பசிதமெனப்படும். உயிர்களது மலத்தைக் கழுவுதலாற் சாரம் எனப்படும். ஆன்மாக்களைத் துன்பத்தினின்றும் நீக்கி இரக்ஷித்தலால் (இரக்சை) எனப்படும்.

இதற்குப் பிரமாணம்.

பூதியெனப்படுஞ்செல்வவேது வினாற்சிவமாகும்
பொருடிகழ்த்து
மேதுவினாற் பசிதமிகுபாவங்கடம்மையச்சத்திசைத்தலாலே
யோதலுறும்பற்பமெனவிடரிடை நின்றகற்றுதலா
லொன்றுஞ்சாரந்
தீதகலவனைவரையுமளிப்பதனாலிரக்கையெனச்
செப்புநூலே

என்னும் சித்தாந்த சிகாமணியானும்,

நீடலுறுந்தீவினையனைத்து நீற்றிவிடலானிறென்றும்
வீடில்வெறுக்கைதருதலினால் விபூதியென்றுமுயிர் தோறுங்
கூடுமலமாசினைக்கழுவுங்குணத்தாற்சாரமென்றுமட
மோடவளர்சோதியைத்தரலாற்பசிதமென்றுமுரைப்பாரால்

என்னும் பேரூர்ப்புராணச் செய்யுளானும் அறிக.

முன்னர்க் கூறப்பட்ட காரணங்களன்றி, விபூதிக்கு வேறு காரணத்தானும் பெயர்ப் பாகுபாடுண்டு. சிவபெருமானது ஐம்முகங்களினின்றுந் தோன்றிய ஐவகை பசுக்களுள், சத்தியோ சாதமுகத்திற்றோன்றிய கபிலவர்ணமுடைய தந்தையினிடத் துண்டாயதற்கு விபூதி என்றும், வாமதேவ முகத்தினின்று முதித்த வெண்ணிறமுடைய பத்திரையென்னும் பசுவினுண்டாய தற்குப் பசிதம் என்றும், அகோர முகத்தினின்று முற்பவித்த கரு நிறச் சுரபியிடத்துப் பிறந்ததற்குப் பஸ்பம் (பற்பம்) என்றும், தற்புருடத்திற்றோன்றிய புகைநிறச் சுசீலையினிடத்தில் உண்டாயதற்கு க்ஷாரம் (சாரம்) என்றும், ஈசான முகத்திற் பிறந்த சிவப்பு நிறச்சுமனையிடத்தில் விளைந்ததற்கு இரக்ஷை (இரக்கை) என்றும் சொல்லப்பட்டன. அது,

"சகயோசாதார்விபூதிச்ச
வாமாதீபசிதமேவச
அகோராதீ பஸ்மஸம்ஸாதத்
புருஷாக்க்ஷரநாமச"

எனவரூஉம் வீராகம சுலோகங்களானுணர்க.

## திருநீற்றைப் பசுவின் சாணத்தைக்கொண்டு ஆக்கும் காரணம்

முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளாகிய பரமசிவக்கடவுள் பிரமதேவர், விஷ்ணு, உருத்திரநாயனார், அனந்தேசுரர், சதாசிவபரமாப்தர் என்னும் பஞ்சமூர்த்திகளானும் முறையே சங்கரிக்கப்படுகின்ற நிவிர்த்திகலை, பிரதிட்டாகலை ஷித்தியாகலை, சாந்திகலை, சாந்தியாதீதகலை என்னும் பஞ்ச கலைகளுக்கு முட்பட்ட தத்துவ புவனங்களின் சங்கராங்களாகிய பிர்மாண்டப்பரளயம், பிராகிருதப்பிரளயம், மத்திமப்பிரளயம், மகாப்பிரளயம், பிரதமமகாப்பிரளயம் என்னும் ஐவகைச் சங்காரத்துள் சுத்தமாயாபுவன முடிவு வரைக்கும் சங்கரிக்கப் படுகின்ற அக்காலத்திலே, அனுசாதாக்கியரிறுதியாயுள்ளாரது உடல்களையெல்லாம் தாம் தமது நெற்றிக்கண்ணின்றுந் தோன்றும் ஒரு தீப்பொறியினாற் சுட்டுச் சாம்பராக்கி, அவற்றைத் தமது திருமேனிக்கண் பரவப் பூசி விளங்குதலால், அந்தத்தேவர்கள் யாவரும் ஒவ்வொருறுப்பு களினும் வசிக்கப்பெற்ற பசுக்களின் சாணத்தைப் பொடித்த திருநீற்றை யதற்கு அறிகுறியாக ஆன்மாக்களும் பூசும்படி விதித்தருளினர். அன்றியும் மும்மலங்களாலுங் கட்டப்பட்ட

ஆன்மாக்களுக்கும் பசுவென்னும் பெயரிருத்தல்போல, கோக்களும் ஆயராற் கட்டப்பட்டுப் பசுவென்னும் பெயரைக் கொண்டிருக்கு முண்மையாலும், பசுக்களின் மலம் நீறாக்கப் படுதல்போல, ஆன்மாக்களாகிய பசுக்களின் மலங்களுஞ் சிவஞான அக்கினியாற்றகிக்கப்படல் வேண்டும் என்பதும் சாமியமாக உணரற்பாற்றாம். பசுக்களின் உறுப்புகளுள்ளே, பிரம விட்டுணுக்கள் கொம்புகளினடியினும், கோதாவரி முதலிய புண்ணிய தீர்த்தங்களும் சராசரவுயிர் வர்க்கங்களுங் கொம்புகளின் நுனியினும், மேலான சிரசிலே சிவபெருமானும், நெற்றி நடுவிலே சிவசக்தியும், மூக்குநுனியில் எம்பெருமானராய சிவகுகக்கடவுளும், மூக்கினுள்ளே வித்தியாதரரும், இரண்டு கன்னங்களினடுவிலே அசுவினிதேவரும், இருகண்களினும் சூரிய சந்திரர்களும், பற்களிலே வாயுதேவனும், ஒளியுள்ள நாவிலே வருணதேவனும் ஊங்காரமுடைய நெஞ்சிலே கலைமகளும், மணித்தலத்திலே இயமனும், இயக்கர்களும், உதட்டிலே உதயாத்த மனசந்திதேவதைகளும், கழுத்திலே இந்திரனும், முரிப்பிலே துவாதசாதித்தர்களும், மார்பிலே சாத்திய தேவர்களும், நான்கு கால்களினும் அநிலன் என்னும் வாயுவும், முழந்தாள்களிலே மருத்துவரும், குளம்பு நுனியிலே நாகலோகத்தார்களும், அதனடுவிலே கந்தருவர்களும், அதன் மேலிடத்திலே அரம்பைமாதரும், முதுகிலே உருத்திரனுஞ், சந்துகடோறும்அட்டவசுக்களும்,அரைப்பரப்பிலே பிதிர் தேவதைகளும்,பகத்திலே சப்தமாதர்களும், குதத்திலே இலக்குமிதேவியும், வாலிலே சர்ப்பராசர்களும், வாலின் மயிரிலே சூரியனொளியும், மூத்திரத்திலே ஆகாயகங்கையும், சாணத்திலே யமுனை நதியும், உரோமங்களிலே மகாமுனிவர்களும், வயிற்றிலே பூமிதேவியும், முலையிலே சகல சமுத்திரங்களும், சடராக்கினியிலே காருகபத்தியமும், இதயத்திலே ஆகவனியமு , முகத்திலே தக்கினாக்கினியமும், எலும்பினுஞ் சுக்கிலத்தும யாகத்தொழில் முழுவதும் எல்லாவங்கங்களிலும் கலங்கா நிலையுள்ள கற்புடை மடவாரும் பொருந்தியிருப்பார்கள். இப்பசுக்கள் சிவபெருமானது சந்நிதிக்கணுள்ள இடபதேவரின் பக்கத்திலிருந்தவனவாம். இவற்றைச் சிவபெருமான் ஆன்மாக்கள் பொருட்டுப் பூமியிற்பிறக்கச் செய்தலால் ஆதியிலே அவை பாற்கடலின் வழியாய்த் தோன்றிப் பூமியில் விளங்கின வென்க.

வேதாவுங்கரியவனுமாவினது கோட்டடியின்விளங்கிவாழ்வர்
கோதாவிமுதற்றீர்த்தங்கோட்டினுதிச்சராசரமுங்கூடிநிற்கு

மீதானசிரத்த மலன்விமலையதனடு நெற்றிவிசாகனாசி
மீதானந்தனில்த்னுண்ணாசிதவினாகேசர் விளங்குவாரே

என்னும் சிவதருமோத்திரத்திரத்தாலுமுணர்க.

## விபூதியின் அற்புதச் செய்கை.

"திருநீறிட்டார் கெட்டார் சிவனை மறந்தாருய்ந்தார்" என்ற முதுமொழிப்படி விபூதியிட்டுக் கெட்டவர் யார்? ஒருவருமிலர். எல்லாரும் பயன் பெற்றவரே. ஆயினும் சுத்த வித்தைகளிற் கூறப்பட்டார் சிலரைக் காட்டுதும். திருநீற்றையிகழ்ந்த வங்கதேசராசனாகிய புயபலன் என்பவன் தன் அரசாட்சியையும் மனைவியையும் இழந்து ஐயமேற்று, பின் பிராமணோத்தமரால் திருநீறிடப் பெற்றுப்பகைவரையும் வென்று, மனைவியையும் அரசியலையும் பெற்றனன். காஷ்மீர் தேசத்திலிருந்த சுதர்மன் என்னும் பிராமணனும், அவன் தம்பியும் பிரமவிஷ்ணுக்களைக் கடிந்து பேசியதனால், அவர்கள் ஊமையாகவும் முடவனாகவும் போமாறு சாபமிட, அதனை விபூதி கொண்டு ததீசிமுனிவர் போக்கி நற்கதியடை வித்தனர். திரிபுரமழிக்கு நிமித்தம் தேர்ச்சாரதியாக நின்ற பிரமன் சரசுவதி தேவியின் பிரிவை யாற்றாதவனாய் இரங்கிவருந்த, எம்பரமன் பாரதிவடிவாய் நின்று பாண்டரங்கக் கூத்தாடி விபூதியை யவன் நெற்றியிலிட்டு மயக்கத்தைப் போக்கியருளினர். சர்ப்பன், பஞ்சமேட்டி, அக்கினி என்னும் மூன்றசுரர்கள் தேவர்களை யெல்லாங் கொல்ல, வீரபத்திரக் கடவுள் அவ்விடத்துச் சென்று விபூதியைத் தூவி அவர்களை யெழுப்பினர். வாமதேவ முனிவரைக் கொள்வான் பிடித்த பிரமராக்கதனொருவன், அவரது திருநீறு பரவப்பூசிய தேச பரிசத்தினால் நல்லறிவும் திவ்விய தேகமும் பெற்றான். பரதார கமனத்தினால் துர்மரணமடைந்து நரகத்தின் மூழ்கிய பிராமணன் தன் பிரேதவுடலில் விபூதிபட்டதினாற் சுவர்க்கத்தை யடைந்தனன். பின்னர்ச் சிவலோக முத்தியுங் கிடைக்கப் பெற்றனன். கௌணிய குலதீபமாய், தவமுதல்வராய், சமய குரவராய் விளங்கிய திரு ஞானசம்பந்தமூர்த்தி நாயனார் கூன் பாண்டியனது வெப்பு நோயைத் திருநீற்றினாற் தீர்த்தருளினார். முழுநீறு பூசிய முனிவர் எண்ணிறந்தோர் சிவசாயுச்சிய முத்தியை யடைந்தனர் என்று பெரியபுராணம். அகத்திய பத்திவிலாச முதலிய உண்மை நூல்கள் முழங்குகின்றன.

விபூதி முப்பத்திரண்டு ஸ்தானங்களிலேனும் பதினாறு ஸ்தானங்களிளேனும் எட்டு ஸ்தானங்களிலேனும்,ஐந்து ஸ்தானங்களிலேனும் தரிக்கற்பாற்றாம்.

முப்பத்திரண்டு ஸ்தானங்களாவன :- தலை, நெற்றி, காதுகள் இரண்டு, கண்கள் இரண்டு, மூக்கு, வாய், கழுத்து, தோள்கள் இரண்டு, முழங்கைகள் இரண்டு, மணிக்கட்டு இரண்டு, மார்பு, விலாப்புறம் இரண்டு, கொப்பூழ், குஹ்யத்வயம், ஜகனம், ஊருக்கள் இரண்டு, தொடைகள் இரண்டு முழந்தாள் இரண்டு, கணுக்கால் இரண்டு, பாதம் இரண்டு, இவற்றுக்கு அதிதேவதைகள் துஷ்டமூர்த்திகளும், அஷ்டவித்யேசுரரும் அஷ்டதிக்குபாலரும், அஷ்டவசுக்களுமாம்

பதினாறு ஸ்தானங்களாவன :- சிரசு, நெற்றி, காது இரண்டு, கழுத்து, தோள்கள் இரண்டு, முழங்கைகள் இரண்டு, மணிக்கட்டுகள் இரண்டு, மார்பு, கொப்பூழ், விலாப்புறம் இரண்டு, முதுகு என்னும் பதினாறுமாம். இவற்றுக்கு அதிதேவதைகள் சிவம், சக்தி, சதாசிவம் ஈசன், வித்தை, வாமை முதலிய நவசத்திகள், அசுவினி தேவதைகள் இருவருமாம்.

எட்டுத் தானங்களாவன :- தலை, நெற்றி, காது இரண்டு, தோள்கள் இரண்டு, மார்பு, கொம்பூழ் என்னும் எட்டுமாம். இவற்றுக்கு அதிதேவதைகள் பிரமாவும் அத்திரிமுதலிய சப்தரிஷிகளுமாம்.

ஐந்து ஸ்தானங்களாவன :- நெற்றி, தோள் இரண்டு, நெஞ்சு, கொப்பூழ் என்னும் ஐந்துமாம்.

அந்தந்த ஸ்தானங்களிலே தரிக்கப்படும் விபூதியினால் அந்தந்த ஸ்தானங்களுக்குரிய கருவிகளாற் செய்யப்படும் பாவங்கள் நீங்குமென்று பிருகச்சாபாலோபநிடதம் கூறுகின்றது.

நெற்றியில் இடப்படும் முதலாவது ரேகை கார்கபத்தியாக்கையையும், அகாரக்ஷரத்தையும், இராசசகுணத்தையும், பூலோகத்தையும், ஆன்மாவையும் கிரியாசக்தியையும், இருக்குவேதத்தையும், காலைச்சவனத்தையும், மகேசுவரனையும் உணர்த்தும்.

இரண்டாவது ரேகை தக்ஷணாக்கினியையும், உகாரத்தையும், சத்துவத்தையும், அந்தரிக்ஷத்தையும், அந்தரான்மாவையும் இச்சாச்சத்தியையும், யசுர்வேதத்தையும், உச்சிச்சவனத்தையும், சதாசிவரையும் உணர்த்தும்

மூன்றாவது ரேகை ஆகபயத்தையும், மகாரத்தையும், தாமச குணத்தையும், திரிலோகத்தையும், பரமான்மாவையும், ஞானசத்தியையும், சாமவேதத்தையும், மாலைசவனத்தையும், சதாசிவரையும் உணர்த்தும். மகாதே

மேற்கூறிய ஏதுக்களாற் சிவபஸ்மமாகிய திருவெண்ணீற்றை அநாதியே ஆத்மாவைப் பற்றியுள்ள பாசவிருளிரியப் பதினாறு இடங்களிலும் விதிப்படி தரித்தல் மாண்பாம். அங்ஙனம் தரித்துச் சர்வஞ் ஞத்துவம், சர்வகர்த்திருத்துவம், சர்வாநுக்கிரகத்துவ முதலிய அரிய பெரிய குணங்களைத் தமக்கே உரியனவாக ஆரணமுடிகள் கொண்டாடும் பராசக்திசமேத பரசிவத்தின்திரு வருளை யடைவதற்கு அவரது திருநாமமாகிய பஞ்சாட்சர ஜபம் இன்றியமையாது வேண்டப்படும். அந்த ஜபத்தின் வாயிலாக எய்தப்பெறும் தியானயோக சமாதிக்கும் பரமஸாக்ஷாத்காரத் துக்கும் அந்நாமம் பரமாந்தரங்க சாதனமாயிருத்தலால் அத்தகைய சகலவேத ஜீவரத்நமாகிய சிவமூலமந்திரத்தின்றி றத்தினையும் ஈண்டு சிறிது தெரிக்கலுறுவாம்.

நகார முதலாகவும் சிகாரமுதலாகவும் உள்ள ஸ்ரீ பஞ்சாக்ஷர பேதங்கள் சைவர்கள் யாவர்க்கும் அவரவர் பக்குவத்துக்கேற்ப மூலமந்திரமாயுள்ளன. ஸ்ரீ பஞ்சாக்ஷரம் ஸ்ரீ ருத்திரத்தின் மத்தியிலிருக்கின்றது. ஸ்ரீருத்திரம் ஏழு காண்டங்களோடு கூடி யஜுர்வேதத்தின் நாலாவது காண்டத்திலும் அந்த நாலாவது காண்டம் யஜுர்வேதம் மத்தியிலிருக்கின்றது. அந்த யஜுர்வேதம் "த்ரயீ" என்னும் பெயருடைய இருக்கு, யசுர், சாமங்களினிடையி லிருக்கின்றது. அதர்வண வேதம் இவற்றுள்ளடங்கும். இந்த மகாமந்திரம் வேத ஹிருதயமாயிருப்பதால் இதனாலே எல்லா வேதங்களும் பிரகாசித்தொளி பெறுகின்றன இதனுண்மையை "வேதநான்கினு மெய்ப்பொருளாவது." என்றும், "அருமறை யினகத்தாளின்" என்றும் தமிழ்வேத மெழுந்து முழக்கியது. இந்தப் பஞ்சாக்ஷரம் ஓரெழுத்து முதற் பதினாறு எழுத்துக்கள் வரையிலும் பீஜங்களது சேர்க்கையால் தொகை ஏயுயுங் குறைந் தும் வரும். அங்ஙனம் பல்திறப்பட்டுப் பல்வகைச் சித்தியின் பொருட்டுவரினும், அவையாவும் பஞ்சாக்ஷரமென்றே சொல்லப் படும். இந்தப்பஞ்சாட்சரம் பிரணவத்தின் பொருளாயிருப்பதாலும், அதைப் போன்று பிருதக்மந்திரமாதலாலும் அது பரம பாவனகரமான மோட்சமந்திரமாகும். இம்மகாமந்திரம் ஐந் தெழுத்தோடு கூடியது. இதன் முதலிற் பிரணவமில்லை. இது சேர்ந்தாற் பஞ்சாக்ஷரமென்றும் பெயர் நங்கிச் சடாக்ஷரமெனப் பெயர் பெறும். பிரணவம் வேறுதுணை வேண்டாது உச்சரிக்கப்

படுவதுபோற் பஞ்சாட்சரமும் வேறொன்றினாசிரிய மில்லாமல் ஜபிக்கப்படுதலால் இரண்டும் தம்மில் வேறுபடாத ஒரே மந்திர மாகும். பிரணவ மென்னுந் தனிமந்திரம் ''ஓம்'' என்று சொல்லப் படும். அது சமஷ்டிப் பிரணவமென்றும், வியஷ்டிப் பிரணவ, மென்றும் இருவகைப்படும். சமஷ்டிப்பிரணவமாவது தொகுத்துக் கூறுவது; அது ''ஓம்'' என்பதாகும். வியஷ்டிப் பிரணவம் பகுத்துக் கூறுவது: அது அ, உ, ம என்பதாகும். இந்த வியஷ்டிப் பிரணவமாகிய அகார, உகார, மகாரமென்னும் மூன்றும் முறையே இறந்தகால, நிகழ்கால எதிர் காலங்களையும், சாத்துவிக, இராஜச, தாமசகுணங்களையும், பிரம, விஷ்ணு, உருத்திரர்களையும், காருக பத்திய தஷண, ஆக்வனீயாக்கினி இருக்கு யஜுர் சாம வேதங்களையும் உணர்த்தாநிற்கும். அகாரம் வாய்திறத்தலினாலே சிருஷ்டியையும், உகாரம் இதழ் குவிதலினாலே ஸ்திதியையும், மகாரம் வாய் மூடுதலினாலே சம்உறாரத்தையும் குறிப்பிக்கின்றமையால் எல்லாவுலகங்களும், எல்லாச் சுருதிகளும் இந்தப் பிரணவத்தினாலே தோன்றி நின்று ஒடுங்குமென்பது பெறப்படுகின்றது. அன்றியும்.

''பிரதம்மம் தாரகா காரம் தீவிதீயும் தண்டமுச்யதே,
தீருதீயம் குண்டலா காரம் சதுர்த்தம் அர்த்த சந்த்ரகம்,
பஞ்சமம் பிந்து சம்யுத்நம் பிரணவம் பஞ்சலக்ஷணம்''.

என்று சிவாகமம் கோஷிக்கின்றவாறு, முதலுறுப்பு நட்சத்திரமும், இரண்டாவது தண்டாகாரமும், மூன்றாவது வட்டவடிவும், நான்காவது அர்த்தசந்திரவடிவும், ஐந்தாவது பிந்துவோடு கூடினவடிவுமாகிய ஐந்திலக்கிணங்களுடையதாதலின், பிரணவமும், ஐந்து கலைகளுடையதாயிற்று. மேலும் இருக்குவேதத்தின் முதல் மந்திரத்தில் அகாரமும், மத்திய வேத மத்திய மந்திரத்தில் உகாரமும், சாமவேதத்து அந்திய மந்திரத்தில் மகாரமும், போந்தமையின், இருக்குவேதமுதலிய மூன்றும் பிரணவசொரூபமாம். இந்தப் பிரணவத்தை விளக்கவே இரண்டாவதாகிய யசுர்வேதம் எழுந்து முதலிலும் இறுதியிலும் பிரணவத்தைச் சொல்லி மத்தியிற் பஞ்சாட்சரத்தை யோதிப் பொலிவெய்தியது. இதனாற் பிரணவமே பஞ்சாட்சரமாயிற்று. மேலே கூறிய பிரணவ இலக்கணங்களுள் முதலிரண்டு உறுப்புகளாகிய தாரகார தண்டாகாரங்கள், ஏனைய மூன்று உறுப்புகளினீங்கி நிற்கும் வழி முற்றியக்கம் பெறாமையால் ஊமை யெழுத்தென்றும் பிள்ளையார்சுழியென்றும் வழங்கப்பட்டு வருகின்றது. இதுவே உ இக்குறியாம். இதற்குதாரணம், (திருமந்திரம்)

"ஊமை யெழுத்தோடு பேசு மெழுத்துறி
லாமைய கத்தனி லஞ்சு மடங்கிடூ
மோமய முற்றதுவுள்ளொளி பெற்றது
நாமய மற்றது நாமறியோமே."

இக்குறி பிரணவ சம்பந்தமாயிருப்பதாற் சன்மார்க்கர்களாயுள்ளவர்கள் எதையாவதொன்றை எழுத ஆரம்பிக்கின்றபோது இதை முதற்கண்ணே எழுதும் சர்பிரதாயங் கொண்டுள்ளார்கள்.

"அகாரம் பிரம்மாணம் நாபௌ ; உகாரம் விஷ்ணும்ஹ்ருதயே, மகாரம் ருத்ரம்ப்றூ மத்யே, ஓங்காரமாகிய பிரணவம் சர்வேஸ்வரம் துவாதசாந்தே"

என்னும் சுருதியானது பிரணவத்தின் முதற்கூறாகிய அகாரம் பிரமனுக்கும், இரண்டாவது கூறாகிய உகாரம் விஷ்ணுவுக்கும், மூன்றாவது கூறாகிய மகாரம் உருத்திரனுக்கும், ஓங்காரமாகிய பிரணவம் சர்வேஸ்வரராகிய திரிமூர்த்தி பரருக்கும் உரியனவென்றும், இவர்கள் முறையே நாபியிலும், இருதயத்திலும், புருவ மத்தியிலும் துவாதசாந்தத்திலும் வீற்றிருக்கின்றார்களென்றுந் தெளியப்படுகின்றது.

மும்மூர்த்திகளுக்குப் பிறப்பிடமாயும் மும்மூர்த்தி யதீதராம் பரப்பிரம்மத்துக்கு இருப்பிடமாயுள்ள இந்தப் பிரணவமென்னும் ஏகாட்சரமந்திரமே யோகிகளாற் றியானிக்கப்படுவது,

இஃதன்றியும், சாமவேத சாரமாகிய சாந்தோக்கிய உபநிடதத்தின் கண்ணுள்ள "தத்துவமசி" என்னும் மகா வாக்கியத்துக்குப் பொருள் ("தத்" என்னும் பரமான்மாவாகிய பிரமத்துக்கும், துவம் என்னும் ஆன்மாவாகிய உயிருக்கும், "அசி" அருட்சத்தி வாயிலாக எய்தும் ஐக்கியத்தும்குமா மென்று) பெறப்படுகின்றது.

அன்றியும் பஞ்சாஷரத்தினும் 'சிவ' என்பது பரமான்மாவாகிய பதிக்கும் "ய" வென்பது சீவான்மாவாகிய பசுவுக்குமாய் அருட்பராசத்தி வாயிலாக ஐக்கியமுண்டாமென்று அர்த்தம் பிரகிசிக்கின்றது. இதனாலே தத்துவமசியும், பிரண வமும். பஞ்சாஷரமும் ஒரு பொருளையே விளக்கி எழுந்தவைகளென்று மேலோர் துணிந்து கூறுவர்: இனி, எடுத்த விஷயம்பற்றிச் சொல்வாம்.

திருநீற்றின் மகிமையை வேதாகமபுராணாதிகள் முழங்குவது மன்றி சகல வேத வேதாந்த இரகசியங்களையெல்லாம் தேவார, திருவாசகம் என்று மந்திரம்மொழிகளாக அநுக்கிரகித்தவர்களும்,

பல திவ்ய அற்புதங்களினாலே சகல சமயாதீத சுத்தாத்து விகு சைவசமயத்தை ஸ்தாபித்தருளினவர்களுமாகிய பரமாசாரிய மூர்த்திகள் நால்வராலும் விடாது வற்புறுத்தி வழுத்தப் பட்டிருக்கின்றது.

அவைகளுட் சிலவருமாறு :-

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திருள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன்றிருவால வாயான் றிருநீறே,

என்று ஆளுடைய பிள்ளையாராலும்,

எவரேனுந்தாமாகவிலாடத்திட்ட
திருநீறுஞ்சாதனமுங்கண்டாலுள்கி
யுவராதேயவரவரைக்கண்டபோது
வுகந்தடிமைத்திற நினைந்தங்குவந்து நோக்கி
யிவர்தேவரவர்தேவரென்று சொல்லி
யிரண்டாட்டாதொழிந்தீசன்றிறமேபேணிக்
கவராதேதொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக்காணலாமே

என வாகீச முனிவரவதாரமாகிய ஆளுடையவரசுகளாலும்,

செம்பொன்மேனிவெண்ணிறணிவானைக்
கரிணகண்டனைமாலயன்காணாச்
சம்புவைத்தழலங்கையினானைக்
சாமவேதனைத்தன்னொப்பிலானைக்
கும்பமாகரியின்னுரியானைக்
கோவின்மேல்வருங்கோவினை நங்க
ணம்பனை நள்ளாறனையமுதை
நாயினேன்மறந்தென்னினைக்கேனே

என்று சுந்தரமூர்த்திநாயனாராலும்,

பிணியெலாம்வரினுமஞ்சேன்பிறப்பினோடிறப்புதிஞ்சேன்
றுணிநிலாவணியினான்றன் றெழும்பரோடமுந்தியம்மா
றிணிநிலம் பிளந்துங்காணாச்சேவடிபரவிவெண்ணீ
றணிகிலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சும்மறே

என்று மாணிக்கவாசக சுவாமிகளாலும் கூறப்பட்ட ஆப்த வசனங்களாலும் போதரும்.

மற்றும் பின்வந்த சந்தான குரவர்களும் வெகுவிதமாய்ப் பூசித்துச் சாதித்திருக்கின்றார்கள்.

ஸ்ரீபரஞ்சோதி முனிவரும் தாம் கூறிய உறாலாசிய மான்மியம் என்னும் திருவிளையாடற் புராணத்தில் 'மறைமுதற் கலைக ளெல்லாம் மணிமிடற்றவனே'' என்று அநாதிமல முத்த சுத்த சாட்குண்ய எளிய பரிபூரணராயும், ஆதிமத்தியாந்த சமாநதீத நாமரூபகுண ரகிதராயும் கறைநிறுத்திய கண்டாராயும் விளங்கா நின்ற முழுமுதற் கடவுள் சிவபெருமானே என்றும் விபூதிதரித்துக் கண்டிகை பூணுதலே மோசஷசாதனமென்றும் அறுதி கூறினர்.

இன்னும் பிரமாணவாக்கியங்கள் பல உள்ளன. அவற்றை யெல்லாம் எடுத்தாளுதற்கு வேதார்த்தங்களைச் சம்சய பிரமாதி தோஷங்களின்றித் தெரிந்த சத்துக்களன்றிச் சாமானிய சாபேசஷாவறிவுடைய என்போல்வார் அதிகாரிகள் ஆகார். இவ்வுபந்நியாசத்துக்கு விதித்துள காலம் நேர்ந்து விட்டமையின், சமாப்தியின்பொருட்டு விரைந்து செல்வாம்.

இதுகாறும் கூறிப்போந்த திருநீற்றின் பிரபாவங்களனைத்தை யும் சுருங்கச் சொல்லுமிடத்து, பஸ்மதாரணம் சகலவேதபடித மென்றும், பஸ்மதாரணம் சமஸ்த கர்மங்களின் பலனை அளிப்ப தென்றும், பஸ்மதாரணம் தேவோபாசனத்துக்கு அந்தரங்கசாதன மென்றும், பஸ்மதாரணம் நித்தியரசஷாரூபமென்றும், பஸ்மதாரணம் புருஷார்த்த ஹேதுவென்றும், பஸ்மம் சித்தசுத்திக்கு மூலமென்றும் பஸ்மம் சிவப்பிரசாதத்துக்கு முக்கியம் என்றும், பஸ்மம் சாச்ஷித் சிவரூபமென்றும், பஸ்மம் நித்தியமுத்தி எனப் படும் நிரதிசயானந்தத்துக்குக் காரணம் என்றும், இனி உக்தரீதியானே பரமப்பிரமாணமாகக்கொள்ளப்பட்ட வித்தியாஸ் தானங்களாகும் பதினான்கு வித்தைகளினாலும், ''கிமேகம் தைவதம் லோகே'' என்றும் வினாவிற்கு உத்தரமாகத் தெரிக்கப்படும் பரம்பொருள் சிவபரஞ்சுடரே என்றும், அவரே மோசஷப்பிரதாயகர் என்றும் அநுவாதமுகத்தானே அறைந்து, அவரது அருட்சத்தி பதியப்பெற்ற விபூதி உருத்திராசஷமே சைவபூஷணமென்றும், அவற்றுள் ஈண்டு உபந்நியாசத்திற்கு எடுத்துக் கொண்ட விஷயம் விபூதி என்றும், அது மேலான ஐசுவரியமெனப் பொருள்படுமென்றும், அர்த்தப்பிரவர்த்தி நிமித்த பேதத்தால் ஐவகைத் திருநாமங்களை ஏற்கப்பெறும் என்றும், அதனை அகப்பற்றுக்கள் புறப்பற்றுக்கள் அழியுமாறு மூவகை ஆன்மாக்களுக்குச் சரீரத்தில் தரிக்குமாறு அமைத்தனர் என்றும், சர்வதேவதைகட்கும் ஆசிரயபூதமான பசுவின் மலத்தைக்

கொண்டு அநாதி பிரதிபந்தமாய் ஆன்மாக்களைப் பற்றியுள்ள ஆணவமாகும் பசுமலத்தைப் போக்க சிவத்துவாபி வியத்திருப வீட்டுப்பேற்றினையடைவதற்குத் தக்கதொரு சற்சாதனமென்றும், கூன்பாண்டியனது வெப்பநோய் தீர்தல் முதலாய அற்புத நிகழ்ச்சிகளுக்கோர் ஏதுவாதல் கொண்டு புற சமயிகளும் இடுக்கண்வந்துழி தந்நிவர்த்திக்காகப் போற்றியணிந்து வரல் உலகப் பிரசித்தமான விஷயமென்றும், அதனைத் தரிக்க வேண்டிய உறுப்பு முதலியவைகள் யாவை என்றும், விபூதியின் மகிமை கூறவே, அவ் விபூதியோடு சைவபூஷணமாக ஒருங்கு கணிக்கப்படும் உருத்திராசஷ மகிமை கூறப்பட்டது என்றும், இவ் விரண்டையுங் கூறவே உபலசஷணையினால் விபூதி தரிக்குங்கால் செபிக்கற்பாலதாகிய ஸ்ரீ பஞ்சாஷரத்தின் பேதங் களும் அவற்றின் பொருள்களும் பயனும் உரைக்கப்பட்டனவாம் என்றும், முன்னோர் மொழிபொருளைப் பொன்னேபோற் போற்றி அன்னோர் ஆதரவுகொண்டு என் புல்லறிவிற் கெட்டியவரை திருநீற்றின் விஷயமாய் இதுகாறும் பாஷிக்கபட்டது.

"அறிவறி யாமை யநேக அடுக்கே
மேலுங்கீழு மென்மனார் புலவர்"

என்றவாறு அறியாமை காரணமாகவும் அகஸ்மாத்தாகவும் சப்தலோபம் அர்த்தலோப முதலிய தோஷங்கள் இவ்வுபந்நியாசத்திற் சம்பவித்திருக்கலாம். கருடத் தியானத்தினால் விடம் நிவர்த்தியாவது போல விபூதி நாமோச் சாரணத்தாற் பிழைபாடுகளும் பொருட்பாடுகளாகப் பரிணமித்துக் காட்டும் என்பதற்கோர் ஐயமில்லை: ஆதலின், இவ்வனவக் களத்தே விஜயஞ் செய்திருக்கும் சிலும்பழுத்தவருள் நெறிபடிந்த சிவஞானச் செல்வர்கள் யாவரும் இவ்வுபந்நியாசத்தை ஏற்றுக் கொள்வார்களெனப் பிரார்த்திக்கின்றேன்.

இச்சைவ மகாசமாஜமானது முமூட்சுக்களாவார் சதாசார மாகும் சநாதந தருமங்களை அநுஷ்டித்தற்கோர் நற்றுறையாக விளங்கவும், பிரதிவருஷமும் விக்கினமின்றி விமரிசையுடன் நடைபெறவும் வைதிக சைவமாகும் ஞானதினகரன் சஹஸ்ர கிரணங்களைப் பொழிவதற்கோர் வியாஜமாக உதயகிரிபோன் றொளிரவிம், அச் சிவ சூரியன் முன்னர் அவைதிக பௌருஷேய நவீன மதாபிமானங் கொண்டு அந்தகாரத்திற் சஞ்சரிக்கும் வாய் மதப் பேய்கள் நிலைகுலைந்து தலைகாட்டாதோடி மறைதற்கோர் காரண பூதமாய் என்றும் நிலைபெறுமாறும் திருவருளைச் சதாகாலமும் சிந்திக்கின்றேன்.

## சைவசித்தாந்தம்

பேயன்ன புறச்சயப் பிணக்குநூல் வழியனைத்தும்
பிழையே யன்றி
வாயண்மை தெளிந்து சைவசித்தாந்த வழிதேறி
யதீத வாழ்விற்
போயண்மி யஞ்செழுத்துந் திருநீறுங் கண்டிகையும்
பொருளாக் கொண்ட
நாயன்மார் திருக்கூட்டம் பணிந்திறைஞ்சும் பெருவாழ்வு
நான் பெற்றேனால்.

## மெய்கண்டசுவாமிகள்.

வேதத்தி னரும்பொருளை விமலனரு ணந்திக்குப்
போதித்த சிவஞான போதத்தைக் குருமாபா
வோதித் தேர்ந்தருந்தமிழா லெமக்குணர்த்தி யெம்மூனஞ்
சேதித்த மெய்கண்ட தேவனடி சிந்திப்பாம்.

திருநீற்றினுண்மை உபந்நியாசம்

முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்